Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 241

செவ்வாய்க்கிழமை 25 ஜூலை 2023

ஆடி 09 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054

# மனிதப்புதைகுழி விவகாரம்; நீதி கோரி 28 இல் ஹர்த்தால்!!!

## வடக்கு - கிழக்கில் ஒத்துழைக்குமாறு காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்புகள் அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25
கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரியும், சர்வதேசக் கண்காணிப்பை வலியுறுத்தியும் எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடக்கு - கிழக்கு முழுவதும் முழு அடைப்புப்போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன், மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டத்துக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. »11

## ரணிலின் சர்வகட்சிக் கூட்டம்

# தமிழ்த் தரப்புக்களிடையே ஒருமித்த நிலைப்பாடில்லை

## புறக்கணிப்பதாக ஜே.வி.பி. அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 25

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நாளை நடைபெறவுள்ள சர்வகட்சிக் கூட்டத்தில் பங்கேற்பதற்கு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி என்பன தீர்மானித்துள்ள நிலையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஜே.வி.பி. என்பன புறக்கணிப்பதற்கு முடிவுசெய்துள்ளன. »11

புரைக்கேறி உயிரிழந்த

## 9 மாதக் குழந்தையின் சடலத்துடன் பல மணிநேரம் காத்திருந்த தாய்

அம்புலன்ஸ் இல்லாது அந்தரித்த நோயாளர்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 25
தாய்ப்பால் புரைக்கேறி உயிரிழந்த 9 மாதக் குழந்தையுடன் பல மணிநேரம் தாயார் »11

## நினைவேந்தலைத் தடுத்தமை ஏற்றுக்கொள்ள முடியாதது!

பொலிஸார் மீதும் சந்திரிகா சீற்றம்

கொழும்பு, ஜூலை 25
கறுப்பு ஜூலையில் கொல்லப்பட்டவர்களுக்காக கொழும்பில் நினைவேந்தலைக் கடைப்பிடிக்கவிடாமல் தடுத்தமையை ஒரு »11

## நினைவேந்துவதால் எவரும் உயிர்க்கப்போவதில்லையாம்!

நல்லிணக்கத்துக்கு குந்தகம்: குருதிக்களரியை ஏற்படுத்த முயற்சி – விமல், கம்மன்பில சீற்றம்

கொழும்பு, ஜூலை 25
நினைவேந்தல் நிகழ்வுகளால் உயிரிழந்தவர்களைத் தட்டி எழுப்பமுடியாது. எனவே இன நல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக்கும் நினைவேந்தல்களை நிறுத்துமாறு உரிய தரப்பினரிடம் கேட்டுக் »11

## கட்டைக்காட்டில் கடற்படைக்கான காணி அளவீடு தடுத்து நிறுத்தம்

விரிவு:- பக்.11

## பணிப்பெண் சிறுமி சாவு; வடக்கு ஆளுநர் கவலை

யாழ்ப்பாணம், ஜூலை 25
கல்வியங்காட்டுப் பகுதியில் வீட்டுப்பணி புரிந்துவந்த சிறுமி கேதீஸ்வரன் »11



# மீண்டும் மீண்டும் மீறப்படும் முல்லை. நீதிமன்ற உத்தரவு

## புத்தர் சிலையை வணங்கிய சிவசேனையின் ஒளிப்பட ஆதாரத்துடன் பொலிஸில் முறைப்பாடு

முல்லைத்தீவு, ஜூலை 25
குருந்தூர்மலையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமையன்று கல்கமுவ சந்தபோதி தேரர், சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் உள்ளிட்ட குழுவினர் நீதிமன்றக் கட்டளையை மீறி புத்தர் சிலையை »12

செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணிற்கு...
முற்பணம்
ரூ.120,000/=
வட்டிவீதம் மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
• அதிகபட்ச இரகசியத்தன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
மேலதிக விபரங்களுக்கு அருகிலுள்ள செலான் வங்கியை நாடுங்கள்
011 200 88 88
செலான் தங்கக்கடன்
செலான் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில் - மோடி பேச்சு பூகோள அரசியல்தான்



## தமிழருக்குப் பயனில்லை என்று ஈ.சரவணபவன் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 25

**ஜனாதிபதி ரணில் மற்றும் இந்தியப் பிரதமர் மோடி இருவருக்கும் இடையிலான பேச்சு பூகோள அரசியல்தான். ஒன்றும் இல்லாத 13 ஆவது திருத்தம் தொடர்பிலேயே இந்தப் பேச்சின்போது ஆலோசிக்கப்பட்டுள்ளது. உண்மையில் சிங்களவர்கள் தமிழர்களுக்கு எதையும் தருவதற்கு இணங்க மாட்டார்கள் என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.**

தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டைத் தொகுதி மூலக்கிளையில் உரையாற்றுகையிலேயே அவர் - இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதுவுமே இல்லாத 13ஆவது திருத்தம் தொடர்பில்தான் இரண்டு நாடுகளின் தலைவர்களும் பேச்சு நடத்தியுள்ளனர். ரணில் 13 மைனஸ் தொடர்பில் பேசியுள்ளார். முன்பு மஹிந்த 13 பிளஸ் என்றுவிட்டு இந்தியப் பிரதமர் இலங்கையை விட்டுச் செல்ல முன்பே அதை மறுத்துரைத்தார். அண்மையில்கூட தமிழர்களின் கோரிக்கை நியாயம் என்று தெரிவித்த ரணில், இப்போது பொலிஸ் அதிகாரம் நீங்கலாக அதிகாரத்தைப் பகிர்வது தொடர்பில் பேசுகின்றார். ஆக, பேச்சுகளும் ஏமாற்று வித்தைகளும்தான் தொடர்கின்றன. இது நின்றபாடில்லை.

இங்கே நாம் கவலைப்படவேண்டிய விடயம் என்னவென்று சொன்னால், நாம் இன்றும் இந்தியாவை நம்புகின்றோம். நம்பிக்கொண்டிருக்கின்றோம். பூகோள அரசியலை மையப்படுத்தி இலங்கை அரசாங்கத்தை நோகாது இந்திய அரசு தனது நலனை காய் நகர்த்துகின்றது.

தமிழினம் அதிகாரமற்று வடக்கு - கிழக்கில் இருக்கின்றது.

இலங்கையைச் சீனாவும் கையாளுகின்றது. இந்தியாவும் கையாளுகின்றது. ஏன் நாம் வேறு நாடுகளிடம் உதவிகேட்க முடியாதா? நாம் முற்று முழுதாக இந்தியாவைத்தான் நம்பிக்கொண்டிருந்தோம். வேறு நாடுகளுடன் எங்களைத் தொடர்புறுத்துவது யார்? இங்கே பூகோள அரசியலே பிரதானமடைகின்றது. தமிழர்களுக்குத் தீர்வுகிடைப்பது கேள்விக்குறியே - என்றார். (ம-125)

## 13 ஆவது திருத்தத்தில் இருந்து பொலிஸ் அதிகாரம் நீக்கப்படும்

### கம்மன்பில தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 25

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தில் உள்ள பொலிஸ் அதிகாரமானது இலங்கையின் தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகும்.

எனவே, 13ஆவது திருத்தத்தில் இருந்து அந்த அதிகாரத்தை நீக்குவதற்கான யோசனை விரைவில் முன்வைக்கப்படும் என்று பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில நேற்றுத் தெரிவித்தார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

எனினும், பொலிஸ் அதிகாரம் குறித்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலேயே முடிவெடுக்கப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். இதற்காக நாளை புதன்கிழமை சர்வகட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கும் அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த நிலையிலேயே 13 ஆவது திருத்தம் தொடர்பில் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார் உதய கம்மன்பில. அவர் மேலும் தெரிவித்ததாவது:

'அடுத்த ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் வாக்குகளை ஜனாதிபதி இலக்கு வைத்துள்ளார்.

இதன்பொருட்டே 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவது தொடர்பில் அவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தியுள்ளார். இது தொடர்பில் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்வதற்காகவே கட்சித் தலைவர்கள் கூட்டத்துக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பிரிவினைவாதம் செயற்படும் நிலையில், பொலிஸ் அதிகாரம் தொடர்பில் பேசுவது ஆபத்தானது.

13 ஆவது திருத்தச்சட்டத்தில் இருந்து பொலிஸ் அதிகாரத்தை நீக்குவது தொடர்பான அரசமைப்புத் திருத்தச்சட்டமூலம் அடுத்தவாரம் முன்வைக்கப்படும். அதற்கான சட்டமூலம் சட்டத்தரணிகள் குழுவால் தயாரிக்கப்பட்டுள்ளது' - என்றார். (ம-44)



Eric Walsh @AmbEricWalsh · Jul 23

Today, we remember the victims of the anti-Tamil violence that spread across Sri Lanka forty years ago. The wounds from July 1983 have yet to heal. 1/2

17 96 258 19.5K

Eric Walsh @AmbEricWalsh · Jul 23

Acknowledging these terrible events and commemorating the victims are vital steps towards inclusivity and sustainable prosperity in Sri Lanka. We'll continue to support the efforts of all who are working toward these goals. 2/2

5 25 57 2,347

## 1983 இன் காயங்கள் இன்னமும் ஆறவில்லை

### கனேடியத் தூதுவர் ருவிற்

1983ஆம் ஆண்டின் காயங்கள் இன்னமும் ஆறவில்லை என்று இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக்வோல்ஸ் தெரிவித்துள்ளார்.

கறுப்பு ஜூலையின் நாற்பதாவது வருடத்தைக் குறிக்கும் விதத்தில் டுவிற்றரில் பதிவிட்டுள்ள கருத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாற்பது வருடங்களுக்கு முன்னர் இலங்கையில் பல பகுதிகளில் இடம்பெற்ற தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளை நாங்கள் நினைவு கூருகின்றோம். 1983 ஆம் ஆண்டின் காயங்கள் இன்னமும் ஆறவில்லை. இந்தப் பயங்கரமான நினைவுகள் இடம்பெற்றன என்பதை அங்கீகரிப்பதும் பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூருவதும் இலங்கையில் அனைவரையும் உள்ளடக்கிய நிரந்தரச் செழிப்புக்கான முக்கியமான நடவடிக்கையாகும். இந்த இலக்குகளை நோக்கிய செயற்பாடுகளை முன்னெடுக்கும் அனைவரையும் நாங்கள் முழுமையாக ஆதரிப்போம் என கனடாத் தூதுவர் தெரிவித்துள்ளார். (அ-ஒ.இ)

## கனேடியத் தூதுவருக்கு எதிராக வீரசேகர கொந்தளிப்பு

கொழும்பு, ஜூலை 25

கறுப்பு ஜூலையை நினைவுகூர்ந்து கனேடியத் தூதுவர் வெளியிட்டுள்ள பதிவுக்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தூதுவர் படுகொலைகளைத் தெரிவு செய்து கண்டிக்கின்றார் எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 1983இல் சிங்களக் காடையர்களால் கொல்லப்பட்ட தமிழர்களை நினைவுகூர்ந்து தூதுவர் பதிவொன்றை வெளியிட்டுள்ளார். அப்பாவி மக்கள் கொல்லப்படுவதையும் வன்முறைகளையும் நாகரீகமுள்ள எந்த மனிதனும் கண்டிப்பான். இடம்பெற்ற வன்முறைகளை நாங்களும் முழுமனதுடன் கண்டிக்கின்றோம்.

அதேவேளை அக்காலப்பகுதியில் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்து தமிழர்களைக் காப்பாற்றிய சிங்களவர்களை நாங்கள் நினைவுகூருகின்றோம். இதற்குப் பதிலடியாக 1983ஆம் ஆண்டு ஜூலையின் பின்னர் தமிழ்க் காடையர் கும்பல்களால் வடக்கிலிருந்து துரத்தப்பட்ட ஆயிரத்துக்கும் அதிகமான சிங்களவர்கள் தமிழர்களை நாங்கள் நினைவுகூருகின்றோம். கிழக்கு மாகாணத்தில் சிங்கள கர்ப்பிணித் தாய்மார்கள் கொல்லப்பட்டதையோ அநுராதபுரத்தில் 200 யாத்திரிகர்கள் கொல்லப்பட்டதையோ அரந்தலாவையில் இளம் பிக்குகள் கொல்லப்பட்டதையோ ஆயுதமேந்தாத சரணடைந்த 600 பொலிஸார் தமிழ்ப் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டதையோ கனேடியத் தூதுவர் கண்டித்ததாக நாங்கள் கேள்விப்படவில்லை. படுகொலைகளைத் தெரிவு செய்து கண்டிப்பது அந்த நபரின் நாகரீக இயல்புகளை கேள்விக்குட்படுத்துவதுடன் அவர்களின் இரகசிய நிகழ்ச்சிநிரல்களை அம்பலப்படுத்துகின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ-ஒ.இ)

## அரசியல்கைதிகளுக்கு பொதுமன்னிப்பு எதற்கு?

### அரசு விளக்கமளிக்க வேண்டும்; மனோகர டி சில்வா ஆவேசம்

கொழும்பு, ஜூலை 25

மத்திய வங்கி மீதான தாக்குதல் தொடர்பில் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட இருவருக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியமைக்கு சட்டத்தரணி மனோகர டி சில்வா கடும் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

போரின்போது வடக்கு - கிழக்குக்கு வெளியே விடு [illegible] தவர்களுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கியமை தொடர்பாக அரசாங்கம் விளக்கமளிக்க வேண்டும் என அவர் கோரியுள்ளார்.

விசேட சூழ்நிலைகளில் பொதுமன்னிப்பு வழங்கப்படுவதை எதிர்க்கவில்லை என்று குறிப்பிட்டுள்ள அவர், பயங்கரவாதக் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுத் தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்படுவது தொடர்பாக மிகுந்த எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும் என்று கூறியுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களுக்கான தனிநாடே இனப்படுகொலைக்குத் தீர்வு

## சிவாஜிலிங்கம் அழுத்தம்திருத்தம்

**யாழ்ப்பாணம், ஜூலை 25**

**இனப்படுகொலைகள் மீண்டும் நிகழாமலிருக்க, தனிநாடாகவும் சுதந்திரத் தேசமாகவும் தமிழ்மக்கள் வலுப்பெற வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
இனப்படுகொலையின் பின்னரான தற்போதைய காலகட்டத்தில் எங்களுக்குச் சமஷ்டி வேண்டுமென நாங்கள் மீண்டும் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்க முடியாது.

சிங்கள - பௌத்த பேரினவாதிகளின் மனநிலை அவ்வாறானதாக இல்லை. நடந்த இனப்படுகொலைகள் எவற்றுக்குமே இன்றுவரை நீதி கிடைக்காத நிலையில் ஈழத் தமிழ்மக்கள் எப்படியான அதிகாரப் பகிர்வின்கீழ் வாழப் போகின்றார்கள் என்பதை அவர்களே தீர்மானிக்கப் பொதுவாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். 1983 ஜூலை மாதத்தில் இலங்கையில் தமிழ்மக்களுக்கு எதிராக மிகக் கொடூரமாக படுகொலைகள் இடம்பெற்று 40 ஆண்டுகளாகின்றன. அந்தக் கறுப்பு ஜூலை, இரத்த ஜூலையாக ஓர் இனப்படுகொலை ஜூலையாக அமைந்துள்ளது.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் தென்னிலங்கையில் வாக்காளர் இடாப்புக்களை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மக்கள் தேடித்தேடிக் கொல்லப்பட்டனர். குறிப்பாக மூவாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கான தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டனர். பல்லாயிரக் கணக்கான வீடுகள், கட்டடங்கள் நொருக்கப்பட்டன.

எனவே, தமிழ்மக்கள் தேடித்தேடி அழிக்கப்பட்டது ஓர் இனப்படுகொலையே.

நாங்கள் இலங்கைத் தீவில் யாழ்ப்பாண இராச்சியமாக, தனிநாடாக இறைமையுடன் வாழ்ந்த தொரு இனம். 400 ஆண்டுகளுக்கு முன்னர் எங்கள் இறைமை பறிக்கப்பட்டது.

இழந்த எங்கள் இறைமையை மீளவும் கோரும் வகையிலும், நடந்த இனப்படுகொலைகளுக்கான ஈடுசெய் நீதியை, பரிகார நீதியைக் கோர வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம்.

1983ஆம் ஆண்டிலும், அதற்குப் பின்னரும் இலங்கையில் நடைபெற்ற இனப் படுகொலைகளுக்காகச் சர்வதேசக் குற்றவியல் நீதிமன்றத்தில் குற்றவாளிகளை நிறுத்த வேண்டிய போராட்டத்தை நடத்த வேண்டியவர்களாகவிருக்கின்றோம் - என்றார். (ம-66)

## ஜேர்மனியில் கறுப்பு ஜூலை

பேர்லின், ஜூலை 25

தமிழீழ மக்களுக்கெதிரான சிறிலங்காவின் இன அழிப்பு நடவடிக்கையின் இரத்தசாட்சியமாக அமைந்த கறுப்பு ஜூலை நினைவேந்தல் நிகழ்வுகள் ஜேர்மனியில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்தப் படுகொலைகளின்போது, தமிழ் மக்கள் தென்னிலங்கையிலிருந்து வெளியேறி, பாதுகாப்புத் தேடி தமது பாரம்பரியத் தாயகப்பகுதியாகிய வடக்கு - கிழக்கில் தஞ்சம் அடைந்தனர். தமது தாயகமே தமக்குப் பாதுகாப்பானது என்பதனை இந்த நிகழ்வு உலகுக்கு உணர்த்தியது. விடுதலைக்கான போராட்டமும் எழுச்சி கண்டது.

அத்துடன், 2009ஆம் ஆண்டு மே வரை நடந்தேறிய நிகழ்வுகள் இன்றும் எமது மக்கள் மீது சிங்கள பயங்கரவாத அரசு முன்னெடுக்கும் நிலப்பறிப்பு, இராணுவ மயமாக்கல், கலாசார அழிப்பு என்பன தனித் தாயகத்தின் அவசியத்தையே உணர்த்துகின்றன என்று இந்த நினைவேந்தல் நிகழ்வில் வலியுறுத்தப்பட்டது. (ம)




## கறுப்பு ஜூலையை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் சுவரொட்டி!

யாழ்ப்பாணம், ஜூலை 25

கறுப்பு ஜூலையின் 40 ஆவது வருடத்தை நினைவுகூர்ந்து தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மற்றும் தமிழ்த்தேசியப் பண்பாட்டுப் பேரவையால் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. சுவரொட்டிகளில் கறுப்பு ஜூலையின் கோரமுகத்தை வெளிப்படுத்தும் ஒளிப்படம் பொறிக்கப்பட்டுள்ளதுடன் தமிழின அழிப்புக்குச் சர்வதேச நீதி வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-18)

### நிர்வாகத் தெரிவு

இலங்கை காந்தி சேவா சங்கத்தின் நிர்வாகத் தெரிவு திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் எதிர்வரும் ஜூலை 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, சங்கத் தலைவர் சோ.க. தம்பிப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது. (ம-ரி-29)

## கடலில் நீராடச்சென்ற 3 இளைஞர்கள் பலி!

நீர்கொழும்புக் கடலில் நீராடிய யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் உட்பட மூவர் நீரில் மூழ்கிச் சாவடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை இந்தத் துயரச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. யாழ்ப்பாணம் சுன்னாகத்தைச் சேர்ந்த ஜெயதீஸ்வரன் ஜெயலக்ஸ்மன் (வயது-23), கொஸ்லாந்தையைச் சேர்ந்த சத்தியமூர்த்தி சிறிவிந்த் (வயது-21), டயகமவைச் சேர்ந்த வடிவேல் ஆனந்தகுமார் (வயது-23) ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்,

இவர்களுடன் நீராடச்சென்ற மற்றோர் இளைஞர் வழங்கிய தகவலைத் தொடர்ந்து நடத்தப்பட்ட தேடுதலில் சடலங்கள் மீட்கப்பட்டன. (ம-22)

### சிறுவர் இல்லத்தில் இருந்து

## சிறுமிகள் மூவர் தப்பியோட்டம்!

கம்பஹாவில் உள்ள சிறுவர் இல்லமொன்றில் வசித்து வந்த 16 வயதுடைய மூன்று சிறுமிகள் தப்பிச் சென்றுள்ளனர் என்று கம்பஹா பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் சிறுவர் இல்லத்தின் பாதுகாவலர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார். சிறுமிகளைத் தேடும் பணியில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். (ம-ரி2)




**கல்வியங்காட்டில 17 வயதுப் பிள்ளை ஒண்டு தூக்கில தொங்கி, அது தற்கொலை தான் எண்டு போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்டும் வந்திட்டுது. அந்தப் பிள்ளையை மற்றவை நேரடியா ஏதும் செய்து உயிரை எடுத்தால்தான் போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட் கொலை எண்டு காட்டும். ஆனால் அந்தப் பிள்ளையை அப்பிடி தூக்கில தொங்கவைக்கிற அளவுக்கு மனசை உடைக்கிற அளவுக்குச் செய்யிற சித்திரவதையள், கட்டுப்பாடுகள், ஏச்சுப்பேச்சுகள் எல்லாம் இந்த ரிப்போர்ட்டுகளில வராதுதானே.**

**தற்கொலை செய்தது 17 வயதான பொம்பிளைப் பிள்ளை. இப்பிடி வீட்டுவேலைக்கு பிள்ளையளை வைச்சிருந்தால் அதைப்பற்றி தொழில் திணைக்களத்துக்கு அறிவிச்சிருக்கவேணும். ஆனால் இவை அறிவிக்கேலை. அப்பிடி அறிவிக்கவேணும் எண்டு இவைக்கு தெரியாதெண்டும் சொல்ல ஏலாது. கம்பஸில லெக்சர் பண்ணுறவை இருக்கிற வீட்டில , இந்த அடிப்படைச் சட்டம்கூட தெரியாதெண்டு சொல்லேலாதே.**

**அதைவிட மாதம் 25 ஆயிரமும், மூண்டு நேரச் சாப்பாடும் எண்டுதான் சம்பளம் பேசுப்பட்டிருக்கு. வீட்டுக் கஷ்டத்தால படிப்பை நிப்பாட்டிப் போட்டு வந்த பிள்ளைக்கு சொன்ன சம்பளத்தையும் கையில குடுக்கேலை. அந்தப் பிள்ளை வேலைக்குச் சேர்ந்து நாலுமாசம். ஆனால் இதுவரைக்கும் வீட்டுக்காரருக்கு மாதம் ஐயாயிரப்படி மூண்டு மாதத்துக்கு 15 ஆயிரம் தான் குடுபட்டிருக்கு. கடைசி மாதம் அதுவும் குடுக்கேலை. முழுக்காசையும் குடுத்தால் பிள்ளை வீட்டை விட்டுப் போடும் எண்டு பிடிச்சு வைச்சிருந்தவையாம்.**

**அந்தப் பிள்ளையை வீட்டை போகவும் விடுறேலை. மாதத்தில ஒருக்கா மட்டும் ரெலிபோனில பிள்ளை தன்ர வீட்டுக்காரரோட கதைக்கலாம். அவ்வளவுதான். அதைமிஞ்சி எந்தத் தொடர்பும் இலை. ஜெயில்ல அடைச்சால் கூட, ஒவ்வொருநாளும் வீட்டுக்காரர் போய் சாப்பாடு குடுத்து, பார்த்திட்டு வரலாம். ஆனால் இஞ்ச அதுவுமில்லை. ஜெயிலை விட மோசமா ஒரு பிள்ளையை வீட்டுக்க அடைச்சு வைச்சிருந்து வேலை வாங்கி, காலாட்டிக் கொண்டிருந்திருக்கினம். இன்னும் வடிவாச் சொன்னால், முந்தின காலத்தில மனிசரை அடிமையா விலைக்கு வாங்கி, மிருகங்களை விட மோசமா நடத்தினமாதிரி அந்தப் பிள்ளையை தங்கட அடிமையா வைச்சிருந்திருக்கினம் அந்த வீட்டுக்காரர்.**

**பிள்ளை வீட்டை விட்டு வெளியில வராததால வேற என்னவெல்லாம் கொடுமையள் நடந்திச்சோ எண்டு ஒருத்தருக்கும் தெரியாது. அதைச் சொல்ல அந்தப் பிள்ளை இல்லையே. வீட்டில உள்ளவைக்கு ஏலாட்டி, இல்லாட்டி நேரமில்லாட்டி ஆரையும் வேலைக்குப் பிடிக்கிறது பிழையில்லை. ஆனால் அப்பிடி வேலை செய்யிறவை மனிசர் எண்டதை நினைவில வைச்சிருக்கோணும். இதயத்தைக் கழட்டி எறிஞ்சிட்டு, அப்பிடி கஷ்டத்தின் நிமித்தம் வேலைக்கு வாறவையை ஆடு, மாட்டை விடக் கேவலமா நடத்தினால், வீட்டை விட்டு வெளியில போகாமல் அடைச்சு வைச்சால், அவை இப்பிடி ஒரு முடிவைத்தானே எடுப்பினம். உண்மையில அந்தப் பிள்ளையைத் தற்கொலைக்கு தூண்டின எல்லாரையும் தண்டிக்கோணும். உரியவை சரியான நடவடிக்கை எடுத்தால் தான், இனியும் இப்பிடி அடிமையா ஆக்களை நடத்திற நிலைமை தொடராமல் தடுக்கலாம்.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநாட்டைக் கோருவது இன்னொரு குருதிக்களரிக்கா?

## கஜேந்திரகுமாரிடம் கேட்கிறார் சரத் வீரசேகர



**கொழும்பு, ஜூலை 25**

**தனிநாடு கோரி நாட்டில் மீண்டும் குருதிக் களரியை ஏற்படுத்தவா கஜேந்திரகுமார் முயல்கின்றார் என்று கேள்வி எழுப்பியுள்ளார் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர.**

தமிழர்கள் ஒற்றையாட்சியைக் கோருகிறார்களா? சமஷ்டியாட்சி கோருகிறார்களா? தனி நாட்டைக் கோருகின்றனரா? என்பதை அறிய துணிவு இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பு நடத்துங்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நாடாளுமன்றத்தில் சவால் விடுத்திருந்தார். இது தொடர்பில் சரத் வீரசேகரவிடம் கொழும்புச் செய்தியாளர் கேட்ட போது,

'இந்தக் கருத்தை முன்வைக்கும் கஜேந்திரகுமார் எந்த நாட்டிலிருந்து கூறுகின்றார் என்பதை முதலில் உணர்ந்துகொள்ளவேண்டும். தனிநாடு கோரிய விடுதலைப் புலிகளுக்கு இறுதியில் என்ன நடந்தது என்பது அவருக்குத் தெரியும். விடுதலைப் புலிகளின் இந்த அபரிமித ஆசையால் தான் பெருமளவான அப்பாவித் தமிழ் மக்கள் உயிரிழக்கவேண்டி வந்தது. மீண்டும் தனி நாடு கோரி குருதிக்களரியை ஏற்படுத்த கஜேந்திரகுமார் விரும்புகின்றாரா? இது ஒற்றையாட்சியுள்ள பௌத்த - சிங்கள நாடு. இங்கு சமஷ்டிக்கோ, தனிநாட்டுக்கோ இடமில்லை' - என்றார். (அ-ஒ,5,22)

## தரக்குறைவான மருந்தென்று எந்தவொரு மருந்தும் இல்லை

### விதண்டாவாதம் புரிகிறார் கெஹலிய

கொழும்பு, ஜூலை 25

தரக்குறைவான மருந்துகள் எது என்பதற்கு வரைவிலக்கணம் இல்லை. இந்த நிலையில் நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டது தரக்குறைவான மருந்து என்று சொல்லப்படுவதை நிராகரிப்பதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக்குழு அமைச்சர் கெஹலிய தலைமையில் நாடாளுமன்றத்தில் அண்மையில் கூடியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

இந்தியக் கடனுதவி இல்லாத காலத்திலும் இந்நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் மருந்துகளில் 80 சதவீதமான மருந்துகள் இந்தியாவிலிருந்தே இறக்குமதி செய்யப்படுவதாக சுகாதார அமைச்சின் அதிகாரிகள் சுகாதார அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் தெரிவித்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் சஞ்ஜீவ எதிரிமான்ன இது தொடர்பில் வினவிய போது, அதிகாரிகள் இதனைத் தெரிவித்ததுடன் அண்மைக்காலமாக இந்தியக் கடனுதவியின் கீழ் கொண்டுவரப்பட்ட மருந்துகள் பயன்படுத்தப்படுவதாக அவர்கள் சுட்டிக்காட்டினர். மருந்துகளைக் கொண்டுவருவதற்கு உரிய பிரிவினர் நடவடிக்கை எடுக்கத் தவறியிருந்தால், மருந்து கிடைக்காமல் மக்கள் உயிரிழப்பார்கள் என அவர்கள் மேலும் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, பேராதனை மருத்துவமனையில் இடம்பெற்ற சம்பவத்தின் போது, குறித்த விடுதியிலிருந்த 12 நோயாளர்களுக்கு அந்த மருந்தை வழங்கியிருந்ததாகக் குறிப்பிட்டார். இந்த ஆண்டில் ஒரு இலட்சத்து 67 ஆயிரம் பேர் இந்த மருந்தைப் பயன்படுத்தியிருப்பதாகத் தெரிவித்தார். மருத்துவமனைகளுக்காக இந்த மருந்துகள் 2 இலட்சத்து 30 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளதாகவும், இந்த மருந்து 2013ஆம் ஆண்டு ஒக்ரோபர் 21 ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ-ஒ,இ)

### நடமாடும் விற்பனையூடாகவும்

## பாணை 150 ரூபாவுக்கே விற்பனை செய்க

யாழ்ப்பாணம், ஜூலை 25

450 கிராம் நிறையுடைய ஒரு இறாத்தல் பாண் மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் சகல நிலைகளிலும் (நடமாடும் விற்பனை உட்பட) 150 ரூபாவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதை விட அதிகரித்த விலைகளில் விற்பனை செய்பவர்களுக்கு எதிராகச் சட்டநடவடிக்கை எடுக்க முடியும் - என்று யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

**இது தொடர்பில் சங்கத்தின் செயலர் கா.பாஸ்கரன் விடுத்துள்ள ஊடக அறிக்கையில்,**

**சில நடமாடும் பேக்கரிப் பொருள்கள் விற்பனையாளர்கள் சில பகுதிகளில் அதிக விலைக்குப் பாணை விற்பனை செய்வதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இதன் மூலம் வயோதிபர்களும் சிறுவர்களும் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர். அதிக விலைக்கு விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு எதிராகப் பாவனையாளர் பாதுகாப்பு அதிகாரசபை அதிகாரிகளிடம் முறையிடுமாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு அறியத்தருகிறோம். எதிர்காலத்தில் சகல நடமாடும் வியாபாரிகளும் தமது வாகனத்தில் விலைப்பட்டியல் வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. (அ-ஒ,5)**

### வடமராட்சி கிழக்கில்

## சட்டவிரோத மீன்பிடி: 16 மீனவர்கள் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 25

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு கடற்பகுதிகளை அண்மித்த இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்ட 16 மீனவர்கள் நேற்றுத் திங்கட்கிழமை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி, முள்ளியான் மற்றும் சிலாபத்தைச் சேர்ந்த 24 வயது முதல் 47 வயதுக்கு இடைப்பட்டவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 11 டிங்கிப் படகுகள் மற்றும் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்கள் என்பன கடற்படையினரால் கைப்பற்றப்பட்டன.

இதேவேளை - கைது செய்யப்பட்ட மீனவர்கள் அனைவரும் உடைமைகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் மற்றும் நீரியல்வளத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (அ-ஒ,66)

## சமிக்ஞையை மீறுவதாலேயே அதிகளவான உயிரிழப்புகள்

### ரயில் நிலைய அதிபர் கவலை

கிளிநொச்சி, ஜூலை 25

ரயில் சமிக்ஞையை மீறிச் செல்வதாலேயே அதிகளவு விபத்துகளும் உயிரிழப்புகளும் ஏற்படுகின்றன என்று கிளிநொச்சி ரயில் நிலைய அதிபர் புத்திகாமினி பரமசிகாமணி தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

5 மாதங்களின் பின்னர் மீண்டும் ரயில் சேவை வடக்கில் வழமைபோல் ஆரம்பித்துள்ளது. ரயில் கடவையில் ரயில் வருவதற்கான சமிக்ஞை காட்டப்பட்ட நிலையிலும், மக்கள் அதனைப் பொருட்படுத்தாது மீறிச் செல்கின்றனர். இதன் காரணமாக பல உயிர்கள் காவுகொள்ளப்படுகின்றன. மக்கள் விழிப்புடன் செயற்படவேண்டும். வீதி சமிக்ஞைகளை மதித்து, ரயில் செல்லும்வரை சில நிமிடங்கள் தாமதித்துச் செல்வதன் மூலம் உயிர்ச்சேதம், பொருள்சேதம் என்பவற்றைத் தவிர்த்துக் கொள்ளமுடியும் - என்றார். (அ-ஒ,27,113)



கோப்பாய் பிரதேச செயலகம் மற்றும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் இணைந்து நடத்திய தொழிற்சந்தை கடந்த 6ஆம் திகதி வியாழக்கிழமை கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. மேற்படி தொழிற்சந்தை நிகழ்வில் வேலை தேடும் இளைஞர், யுவதிகள் பலரும் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (ய-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கையில் வெண்ணெய் இருக்க...

'கையில் வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைந்தாற்போல்' என்பதொரு முதுமொழி தமிழில் வழக்கில் உள்ளது. இந்த நிலைதான் இப்போது இலங்கையுடையது. இலங்கை தன்னிடமுள்ள ஏற்றுமதி வளத்தைப் பயன்படுத்தத் தவறுகின்றது என்று உலக வங்கி எச்சரித்த அதே தினத்தில், தேங்காய் எண்ணெய்யை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்வதற்குக் கொள்கை ரீதியாக இணங்கியிருக்கின்றது அரசாங்கம். நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய்கள், தேசிய நுகர்வுக்கும் கைத்தொழில் துறைக்கும் போதுமானதாக இல்லாமையால் தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்வது தவிர்க்க முடியாததே என்று சாட்டுச் சொல்கின்றது ரணில் அரசாங்கம்.

நான்கு பக்கமும் கடன்கள் சூழ்ந்து தத்தளித்துக் கொண்டிருக்கும் இலங்கைத்தீவு, கடன் மறுசீரமைப்புகளையும் தற்காலிகக் கடனுதவிகளையும் மட்டுமே நம்பிக்கொண்டு காலத்தைக் கடத்திவிட முடியாது. மாறாக 'பொருளாதார உறுதிப்பாடு' என்ற நிலையை எவ்வளவுக்கெவ்வளவு விரைந்து ஏற்படுத்துகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு இந்த நாடு கடன் சுமையில் இருந்து மீட்சி பெறும். இந்தப் பொருளாதார உறுதிப்பாட்டை அடைய வேண்டுமாயின் முதலில் தன்னிறைவு காணவேண்டிய துறைகளை இனங்கண்டு அவற்றைப் பலப்படுத்த வேண்டும். இலங்கை தன்னிறைவு காணக்கூடிய ஏதுநிலைகள் உள்ள துறையாக 'தெங்கு' காணப்படுகின்றபோதிலும், அதில் எவ்வளவுதூரம் இலங்கை படுதோல்வியடைந்திருக்கின்றது என்பதைத்தான் அரசாங்கத்தின் இந்த இறக்குமதி அறிவிப்பு கட்டியம் செய்கின்றது.


நீண்டகாலமாக இடம்பெற்ற போரால் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் ஏராளம் தென்னைகள் அழிவடைந்தன. குறிப்பாக வடக்கில் தென்னை அதிகமாகப் பயிரிடப்பட்ட தென்மராட்சிப் பிரதேசத்தில் இருந்த பல்லாயிரம் தென்னைகள் 'தீச்சுவாலை' இராணுவ நடவடிக்கையின்போது படையினரால் மேற்கொள்ளப்பட்ட 'மல்ரிபரல் எறிகணை' தாக்குதல்களால் தலையிழந்தன. போரின் பின்னரும்கூட எஞ்சிய தென்னைகளைப் பாதுகாக்கவும், அழிவடைந்த தென்னைகளுக்கு மாற்றாக தேசிய ரீதியிலான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவும் அரசு தவறியிருந்தது. மண்ணுக்காக உயிர்நீத்த மாவீரர்களுக்காகவும், போரில் கொல்லப்பட்ட உறவுகளின் நினைவாகவும் நடுகை செய்யப்பட்ட தென்னைகளைத் தவிர வேறெந்த பெருந்திட்டமும் வடக்கு – கிழக்கில் முன்னெடுக்கப்படவில்லை. நிலைமை இவ்வாறிருந்தால் தேங்காய் எண்ணெய்யை இறக்குமதி செய்யாமல் வேறு என்னதான் செய்யமுடியும்? தென்னிலங்கையில் தென்னைப்பயிற்செய்கை அமோகமாக மேற்கொள்ளப்படும் பகுதிகளை ஒன்றிணைத்து தெங்கு முக்கோண வலயம் ஒன்று பிரகடனப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஆனால், அந்தத் தெற்கு முக்கோண வலயத்தின் ஊடாக நாட்டின் தெங்குப் பொருள்சார் தேவையை முழுமையாகப் பூர்த்திசெய்ய முடியாதிருக்கின்றது. அந்த நிலையை மாற்றத் தகைய முயற்சிகளை எடுக்கவேண்டும் என்றுதான் ஓர் அரசாங்கம் சிந்திக்க வேண்டுமே தவிர, காய்ச்சலுக்குப் பனடோல் போடுவதைப்போல தற்காலிகத் தீர்வாக இறக்குமதியை உடனடியாகத் தேர்ந்தெடுக்கக்கூடாது. ஏனெனில், காலப்போக்கில் இந்தத் தற்காலிகத் தீர்வே நிரந்தரத் தீர்வாகவும் மாறிவிடும் அபாயமுண்டு.

இலங்கையை விடவும் மிகச் சிறிய நாடான மாலைதீவு, உலகின் பல நாடுகளுக்கும் தெங்குப் பொருள்களை ஏற்றுமதி செய்யுமளவுக்கு தன் உற்பத்திகளைப் பெருக்கியிருக்கின்றது. பாலைவனத் தேசமான சவூதிஅரேபியா தென்னம்பிள்ளைகளை நடுகை செய்வதற்காக இலங்கையிடமிருந்து தொற்றுநீக்கிய தென்னம் பொச்சுகளைக் கோரியிருக்கின்றது. ஆனால், மாலைதீவு மற்றும் சவூதிஅரேபியாவை விடவும் மிகநீண்ட கடலோரங்களையும் நிலப்பரப்பையும் மனிதவளத்தையும் கொண்டிருக்கும் இலங்கை, இந்தத் துறையில் தனக்கென எந்தவொரு முத்திரையையும் பதிக்கமுடியாமற்போனமை வெட்கித் தலைகுனியவேண்டிய தோல்வியே!.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபயவின் காலத்தில், வடமாகாணத்தையும் உள்ளடக்கி தெங்கு முக்கோண வலயம் உருவாக்கப்பட்டது. கோத்தாபய அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட வெகு சில நல்ல திட்டங்களில் இதுவுமொன்றாகவே அமைந்தது. ஆனால், 'அறிவிப்பின் பின்னரான செயற்பாட்டு நடவடிக்கைகள்' முழுமையாக மந்தமடைந்தன. பின்னர் படிப்படியாக அற்றுப்போகவும் செய்தன. இதுவும் தேங்காய்களுக்கு இலங்கையில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடுகளுக்கு முதன்மைக் காரணம். தென்னை நீண்டகாலப் பயிர்தான். ஆனால், இலங்கையில் இப்போதிருக்கும் 'பயன்தரு' தென்னைகளை உரியமுறையில் பேணிப் பாதுகாத்தால் அடுத்த இரண்டே மாதங்களில் தேசிய உற்பத்தி (தேங்காய்) பெருகும். இறக்குமதித் தேங்காய் எண்ணெயின்தரம் தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள்கிளப்பப்பட்டுள்ளன. ஏற்கனவே இந்த விவகாரம் சுகாதாரச் சீர்கேட்டுடன் நெருங்கித் தொடர்புற்ற விடயமாக அமைந்திருக்கின்றது. இவ்வாறானதொரு பின்னணியில், தேங்காய் எண்ணெய்க்காக டொலரைச் செலவிடுவதை விடவும் 'பயன்தரு தென்னைகளுக்காக' பணத்தை ஒதுக்குவதே புத்திசாலித்தனமான விடயமாக அமையும். ஆனால், இலங்கை அரசாங்கத்துக்கும் புத்திசாலித்தனத்துக்கும்தான் எட்டாப் பொருத்தமாயிற்றே!

நாளொரு நல்வார்த்தை

நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும், எப்போதுமே மண்டியிடுவது இல்லை.
- அப்துல்கலாம்




# இந்தியாவுக்குப் பாலம்: தெரிவுக்குழு பரிசீலனை

**கொழும்பு, ஜூலை 25**

**இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பாலம் அமைப்பது தொடர்பில் ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழு ஒன்று அமைக்கப்படவுள்ளது. அந்தக் குழு இது தொடர்பான அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்தியப் பிரதமர் மோடிக்கும் இடையில் கடந்த 21 ஆம் திகதியன்று இடம்பெற்ற சந்திப்பில், இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பாலமொன்று அமைப்பது தொடர்பில் உடன்பாடு எட்டப்பட்டது. இதன் அடுத்தகட்ட நகர்வுகளுக்காகவே தற்போது நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்படவுள்ளது. இந்தக் குழு பாலம் அமைப்பது தொடர்பில் ஆராய்ந்து நாடாளுமன்றத்துக்கு அறிக்கையிட்டதன் பின்னர், அடுத்தகட்ட நகர்வுகள் தொடர்பில் அறிவிக்கப்படும் என்றும் ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார். (ம)



### ஐ.நா. பொதுச்சபையில் உரையாற்றுவார் ரணில்

கொழும்பு. ஜூலை 25
செப்ரெம்பர் மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக்கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார்.
செப்ரெம்பர் மாதம் 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதிவரை ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டம் நியூயோர்க் நகரில் இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத் தொடரின் இறுதி நாளில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரையாற்றவுள்ளார். (ம-6)

# போட்டித்தன்மையான எரிபொருள் விநியோகம்

## எரிசக்தி அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 25



நாட்டில் விரைவில் போட்டித்தன்மையான எரிபொருள் விநியோகம் உறுதிப்படுத்தப்படும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி.சானக தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அனைத்து நிறுவனங்களுக்கும் பொதுவான வகையில் விலைச் சூத்திரத்தைப் பயன்படுத்தி எரிபொருளுக்கான அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். போட்டித்தன்மை கொண்ட எரிபொருள் விநியோகத்தை உருவாக்குவதே இதன் பிரதான நோக்கமாகும். இந்தப்புதிய முறையின்மூலம் அனைத்துநிறுவனங்களுக்கும் விலைச் சூத்திரத்தைப் பயன்படுத்தி அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இதனால், எதிர்காலத்தில் அதிகபட்ச சில்லறை விலையை மட்டுமே அமைச்சு முடிவு செய்யும். ஒரு நிறுவனம் விலையைக் குறைக்கும்போது, ஏனைய நிறுவனங்களும் விலையைக் குறைப்பதன் மூலம் நாடு பெரும் நன்மையை அடையும் - என்றார். (ம-இ)

நாளை
26.07.2023
புதன்கிழமை
ஆடி 10

சுபநேரம் : 04.32 - 06.02
ராகுகாலம் : 12.02 - 01.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெங்காயப் பயிர்களில் இலைச் சுரங்க மறுப்பி!

## அவதானமாக இருக்குமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்து

**யாழ்ப்பாணம், ஜூலை 25**

**யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெங்காயப் பயிர்ச்செய்கையில் இலைச் சுரங்க மறுப்பித் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. ஆதலால், விவசாயிகள் உரிய நடைமுறைகளைப் பின்பற்றுமாறு பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி அ.சிறிரங்கன் கோரிக்கை விடுத்துள்ளார்.**



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ். மாவட்டத்தின் சுன்னாகம், தெல்லிப்பழை, மாதகல், சங்கானை, அச்சுவேலி, கோப்பாய் மற்றும் வடமராட்சி பிரதேசங்களில் வெங்காயச் செய்கையில் இலைச் சுரங்க மறுப்பித் தாக்கமானது அதிகளவில் அவதானிக்க முடிகிறது. ஆக்கிரமிப்புப் பீடையான இலைச் சுரங்க மறுப்பி கடந்தகாலங்களில் வெங்காயத்தில் சிறியளவிலான தாக்கத்தை ஏற்படுத்திய போதிலும் தற்பொழுது கூடியளவில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

வெப்பநிலை அதிகரிக்கும்போது பெண் நிறையுடலி பல தடவைகள் முட்டை இடுவதன் மூலம் பூச்சிகளின் எண்ணிக்கை அதிகரித்து தாக்கமும் அதிகரிக்கும். வாழ்க்கைக் காலத்தில் ஒரு பெண் இலை சுரங்க மறுப்பி இலை நுனியில்சூலிடப்படுத்திமூலம்துளையை ஏற்படுத்தி இலையின் உட்பரப்பில் முட்டைகளை இடும். இந்த முட்டைகள் 0.5 மில்லிமீற்றர் அளவுடைய வெளிர் வெள்ளை நிறமுடையவை. 46 நாள்களில் முட்டை பொரித்துக்கும்பியாகும். இந்தக்குடம்பியின் நிறமானது ஆரம்பத்தில் வெள்ளை நிறத்திலிருந்து முதிர்வடையும் போது மஞ்சள் நிறமாக மாறும்.

இது மூன்று வளர்ச்சிப்பருவங்களைக் கொண்டது. இதனை வெற்றுக் கண்களால் அவதானிப்பது கடினம். குடம்பியானது இலை நுனியிலிருந்து கீழ் நோக்கிச் சுரங்க அமைப்பை உருவாக்கி உட்புறத்திலிருந்து இழையங்களை உணவாக உட்கொள்கின்றது. இதனால் வெள்ளை நிறக்கோடுகளை அவதானிக்கமுடியும். தாக்கம் அதிகரிக்கும்போது இலைகள் எரிந்து வைக்கோல் நிறமாக மாறும். கூட்டுப்புழு கடும் கபில நிறத்தில் காணப்படும். 7 நாள்களில் குடம்பியானது கூட்டுப்புழுவாக மாற்றமடையும். கூட்டுப்புழு மண்ணில் அல்லது இலையின் அடிப்பகுதி சுரங்கத்தில் அல்லது குமிழில் காணப்படும். குடம்பியானது நிறையுடலியாக மாறும் செயற்பாடானது காலநிலையில் தங்கியிருக்கும். நிறையுடலி 3 மில்லி மீற்றர் நீளமுடையது.

**முகாமைத்துவம் செய்தல்**

இலைச்சுரங்க மறுப்பியினை கட்டுப்படுத்தல் மிகவும் சவாலான ஒரு விடயமாகக் காணப்படும் நிலையில் ஒருங்கிணைந்த பீடைமுகாமைத்துவம் ஊடாகவே இதனைக் கட்டுப்படுத்த முடியும்.

அறுவடை முடிந்த பயிர் மீதிகளை உடனடியாக வயலிலிருந்து அகற்றி மண்ணில் காணப்படும் கூட்டுப் புழுக்களை அழிப்பதற்காக உடனடியாக உழுதல், வரம்புகளில் காணப்படும் விருந்து வழங்கி தாவரங்களை அழித்தல், பயிர்ச் சுழற்சியை மேற்கொள்ளல், தூவல் நீர்ப்பாசனத்தை மேற்கொள்வதோடு பின்வரும் விவசாய இரசாயனங்களில் ஒன்றைக் காலை 7 மணிக்கு முன்னர் அல்லது மாலை 5 மணிக்குப் பின்னர் சிபார்சு செய்யப்பட்ட அளவில் விசிறுதல், அபமறின், புரோப்பினோபொஸ், ஸ்பினோசைட் மற்றும் தயோசைக்கிளம் ஆகிய மருந்துகளை உரிய நடைமுறைகளை பின்பற்றி விசுறுதல் உள்ளிட்ட பொறிமுறைகள் ஊடாக இந்த நோய் நிலையைக் கட்டுப்படுத்த முடியும் - என்றார். (ம-20)

## வடமாகாணத்தில் மழைக்கு வாய்ப்பு

கொழும்பு, ஜூலை 25

வடக்கு மாகாணத்தில் இன்று மழைக்குச் சாத்தியம் காணப்படுகின்றது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தத் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடும். வடமாகாணத்தில் சிறிதளவு மழை பெய்யக் கூடும். அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளையில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இதேவேளை, நாட்டின் சில பகுதிகளில் சீரான வானிலை நிலவும்.

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளிலும், வடக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும், மொனராகலை, அம்பாந்தோட்டை மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோமீற்றர் வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக்கூடும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் - என்றுள்ளது. (ம)

## மலையகம் 200 மன்னாரிலிருந்து நடைபயணம்!

மன்னார், ஜூலை 25

இலங்கைக்கு மலையக மக்கள் வருகை தந்து 200ஆவது ஆண்டு நினைவாக தலைமன்னாரில் இருந்து நடைபயணம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

மலையக மக்கள் இலங்கைக்கு வந்து 200 ஆண்டுகள் ஆகின்றன. அவர்கள் தலைமன்னாரிலிருந்து மாத்தளை வரை நடைபயணமாகவே வந்து மலையகப் பகுதியில் குடியேறினார்கள் என்று வரலாறு தெரிவிக்கின்றது. இதனாலேயே மன்னாரில் இருந்து மலையகம் வரை எதிர்வரும் 29 ஆம் திகதிமுதல் இந்த நடைபயணம் ஆரம்பமாகவுள்ளது. (ம-66)

## சீமைக்கருவேல மரங்களின் விவரங்களைத் தருக!

### மாவட்டச் செயலர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 25



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் எங்கெல்லாம் சீமைக்கருவேல மரங்கள் உள்ளனவோ அவற்றின் விவரங்களைத் தருமாறு மாவட்டச்செயலர் அ.சிவபால சுந்தரன் கோரிக்கை விடுத்துள் ளார்.

யாழ்ப்பாண மாவட்ட விவசாயக் குழுக்கூட்டம், மாவட்டச் செயலர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன் போதே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

உணவுப் பாதுகாப்பு மற்றும் போஷாக்குப்பொறிமுறை தொடர்பாக மாவட்ட, பிரதேச செயலக, கிராம மட்டங்களில் நடைபெற்ற கூட்டங்கள் அதன் முன்னேற்ற அறிக்கைகள் மாவட்டச் செயலரால் கோரப்பட்டன. அத்துடன், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் ஊடாக வழங்கப்பட்ட உதவித் திட்டங்கள் மற்றும் உணவுப் பரிமாற்ற சங்கங்களூடாக நடத்தப்பட்ட உணவுக் கண்காட்சிகள், தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் போஷாக்கு தொடர்பான அறிமுகப்படுத்தப் பட்டுள்ள செயற்பாடுகள், சிறுபோக உணவு உற்பத்தி, கால்நடை உற்பத்தி, கடலுணவு உற்பத்தி தொடர்பாகவும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் யாழ்.மாவட்டத்தில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் விவசாயக் காப்புறுதிகள் தொடர்பாகவும், விதை உற்பத்தி தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது. கருவேல மரங்கள் யாழ்ப்பாணத்தின் நிலக்கீழ் தண்ணீர் வளத்துக்கு பேராபத்தாக மாறும் நிலையில், அவை எங்கெல்லாம் காணப்படுகின்றனவோ அது தொடர்பில் அறிக்கையிடுமாறும் மாவட்டச் செயலரால் கோரப்பட்டது. (ம-26)

## முத்தமிழ் விழா!

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்ப்பாண மாநகரசபை முன்னெடுக்கும் முத்தமிழ் விழா எதிர்வரும் ஜூலை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நல்லூர் ஸ்ரீதுர்க்கா மணி மண்டபத்தில் மாநகரசபை ஆணையாளர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் கலந்து கொள்ளவுள்ளார். மேலும் இவ்விழாவில் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான 'அரசகேசரி' விருது வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன. (ம-ரி2)

## யாழ். மாவட்டத்துக்கு தேசியத்தில் விருது!

யாழ்ப்பாணம், ஜூலை 25

யாழ்.மாவட்டச் செயலகம் இந்த வருடமும் சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத்திட்ட நடைமுறைப்படுத்தலில் தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்றுள்ளது. இதையடுத்து ஒன்பதாவது தடவையாக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் தேசிய விருதை வென்றுள்ளது.

இந்தத் தேசிய விருது வழங்கும் நிகழ்வானது, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை உள்ளடக்கி திருகோணமலை மாவட்டத்தில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் யாழ். மாவட்டத்துக்கான தேசிய விருது முன்னாள் யாழ். மாவட்டச் செயலரும் தற்போதைய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளருமான கணபதிப்பிள்ளை மகேசனுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. யாழ். மாவட்டத்துக்கான தேசிய விருதை யாழ். மாவட்டச் செயலருக்குப் பதிலாக மேலதிக மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் பெற்றுக்கொண்டார். (ம-27)

## சுகாதாரத் தொழிற்சங்கம் போராட்டத்துக்குத் தயார்!

நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டமொன்றை நடத்துவதற்கு சுகாதாரத் தொழிற்சங்கங்கள் தயாராகி வருகின்றன. சுகாதார ஊழியர்கள் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்க தடை விதிக்கப்பட்டு, சுகாதார அமைச்சின் செயலாளரால் சுற்றறிக்கை விடுக்கப்பட்டிருக்கும் நிலையிலேயே இந்தத் தொழிற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இந்தச் சுற்றறிக்கை எங்களின் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்கும் செயல் என்று தொழிற்சங்கங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டுக்காகப் பிள்ளைகளை தாரைவார்க்கத் தயாரில்லை

## நிமல்கா பெர்னாண்டோ சுட்டிக்காட்டு



கொழும்பு, ஜூலை 25
நாட்டில் புரையோடிப் போயுள்ள பிரச்சினைகளுக்கு பேச்சு ஊடாகத் தீர்வு காண வேண்டும். அதை விடுத்து போராட்டத்தின் ஊடாகத் தீர்வு காண முற்பட்டால் நாட்டுக்காக தமது பிள்ளைகளை தாரை வார்க்க எந்தத் தாயும் இங்கு தயார் இல்லை -இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்தின் முன்னாள் உறுப்பினர் சட்டத்தரணி நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:- பிள்ளைகளைத் தேடும் பல தாய்மார்களின் பயணம் இதுவரை நிறைவடையவில்லை. 30 வருடகாலப் போர் எந்தப் பிரச்சினைக்குத் தீர்வு பெற்றுக்கொடுத்துள்ளது என்பது கேள்விக்குரியது. போர் முடிவடைந்ததன் பின்னர் பல தாய்மார்களின் தேடல்கள் தீவிரமடைந்தன. வடக்கு மற்றும் தெற்கு மாகாணங்களின் தாய்மாரின் தேடல்கள் இன்றும் தொடர்கின்றன.

1983ஆம் ஆண்டு இனக்கலவரம் பல சம்பவங்களை இன்றும் நினைவுபடுத்தியுள்ளது. 40 வருடங்கள் கடந்துள்ள நிலையில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இன்றும் நீதி கிடைக்கவில்லை. பெரும் போராட்டத்துக்கு மத்தியில் சட்டத்தின் ஊடாக காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டது. பல முறைப்பாடுகள் கிடைத்தன. காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான அலுவலகம் சிறந்த முறையில் செயற்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயத்தைப் பெற்றுக்கொடுக்கவேண்டும் - என்றார்.

(எ-இ)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு. ரஞ்சித் தேவராஜனின் அன்புத் தந்தை

**திரு. செபமாலை தோமஸ் ஞானேஸ்வரன்**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.**

(CS/51398)AH-1

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர் திரு. ரஞ்சித் தேவராஜனின் அன்புத் தந்தை

**திரு. செபமாலை தோமஸ் ஞானேஸ்வரன்**

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு மிகுந்த மனவேதனை அடைகின்றோம். அன்னாரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா இறைவனில் சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.


**ஆசிரியர் சங்கம்,
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.**

(CS/51398)AH-1

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**அமரர் கோவிந்தபிள்ளை கோபாலசிங்கம்**

தோற்றம் 20.03.1946 — மறைவு 04.08.2022



அப்பா,
உயிருக்குள் உயிராக
இதயத்தின் துடிப்பாக
உன்னத அன்பால் உங்கள்
நினைவுகளில் நாங்கள்....

**குடும்பத்தினர்.**
36/1A, காட்டுக்கந்தோர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(CS/51369)AH-

## மரண அறிவித்தல்



தோற்றம் 26 . 03 . 1958
மறைவு 24 . 07 . 2023

**திருமதி றோகினி பத்மநாதன்**
**(ஓய்வுபெற்ற ஆசிரியை – இணுவில் மத்திய கல்லூரி)**

தாவடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி றோகினி பத்மநாதன் நேற்று (24.07.2023) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற புவனேந்திரன் மற்றும் லீலாவதி தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சொர்ணரத்தினம் தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற பத்மநாதனின் அன்புப் பாரியாரும், யோகானந்தாவின் சகோதரியும், சுரேகா, சஞ்ஜீவன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சபாநாதன், பவானி, யோகநாதன், சுஜாதா ஆகியோரின் மைத்துனியும், சசிகலா, சிறீகலா, கலாறாஜ், முகுந்தன், கிரிதரன், கோகுலன், முரளிதரன், பிரமீளா, பிரேமானந்த், பத்மஜெயன், இந்து, சூரியகுமார், முரளி, வசந்தி, நிரஞ்சன், மதனன், சுகந்தி, ஜெயந்தி, றோகன், பபீற்ரா, நிறஞ்சன், பாஸ்கரன், சயந்தினி, தர்சி, சதீஷ், நிஷான், றதீபா, கிஷோக்குமார், ரூபிகா ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், காலஞ்சென்ற குலதேவி மற்றும் சாந்தினி, அபிராமி, பானுமதி, காலஞ்சென்ற முரளிகிருஷ்ணன், மற்றும் சஞ்ஜீவனி, ராஜதேவன், ராஜகாந்தன், ராஜரூபன், பிரபாலினி, தர்ஷினி ஆகியோரின் உடன் பிறவா மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.07.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25623) AH-1

**மகன் - சஞ்ஜீவன் - 077 469 9580**

## கேள்வி அறிவித்தல்

**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை.**

**மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை வேலைத்திட்டம் 2023**

01. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசினது மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் உள்ளவாறான வேலைத்திட்டங்களுக்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. செயலாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட புனரமைப்பு வேலைகளுக்காக கோருகின்றார்.

03. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

04. கேள்விபெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் விலைக்கேள்வியாளர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி மற்றும் கட்டுமான அமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

05. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும், மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

06. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037 , தொலைநகல் 021-205-0036 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அம் முகவரியில் **25.07.2023** ஆம் திகதியிலிருந்து **06.08.2023** ஆம் திகதி வரை மு.ப 9.00 மணியிலிருந்து பிற்பகல் 16.00 மணிவரை அலுவலக நாட்களில் விலைக் கேள்வி ஆவணங்களைப் பரிசீலனை செய்யலாம்.

07. அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை செயலாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் அலுவலக நாட்களில் **25.07.2023** ஆம் திகதியிலிருந்து **06.08.2023** ஆம் திகதி வரை காலை 9.00 மணிக்கும் பிற்பகல் 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (VAT நீங்கலாக) செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

08. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து செயலாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை எனும் முகவரிக்கு 07.08.2023 ஆம் திகதி பிற்பகல் 15.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.

09. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் **02.08.2023** ஆம் திகதியன்று பிற்பகல் 14.30 மணிக்கு நடைபெறும். இதில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.

10. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு கேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

11. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/PSDG/W/01/2023 | Reconstruction of Thannadshi Road | 8.69 Mn | 98 நாட்கள் | C8, C7 and C6 | 150,000.00 | 19.11.2023 |

**தயானந்தன் தர்சினி
செயலாளர்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.**

(CR/40302)AH-1 **25.07.2023**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொலித்தீனில் சுற்றப்பட்டு சிசுவின் சடலம் மீட்பு!

கொழும்பு, ஜூலை 25

பொலித்தீன் பையில் சுற்றப்பட்ட நிலையில் சிசுவொன்றின் சடலம் நேற்று திங்கட்கிழமை மீட்கப்பட்டுள்ளது. நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வென்ஞ்சர் தோட்டச் தொழிற்சாலைக்கு அருகில் சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் உள்ள நபர் ஒருவர், நோர்வூட் பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்தே சிசுவின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-22)



## ஆண்டுவிழாவும் மெய்வன்மையும்

யாழ்ப்பாணம், ஜூலை 25

அராலி களவத்துறை விளையாட்டுக் கழகத்தின் 76ஆவது ஆண்டு விழா நேற்றுமுன்தினம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை கழக மைதானத்தில் இடம்பெற்றது.

மேற்குறித்த நிகழ்வின் ஒரு பகுதியாக பாரம்பரிய விளையாட்டுக்கள், துடுப்பாட்ட சுற்றுப்போட்டிகள் என்பன இடம்பெற்றன. இந்தப் போட்டிகளில் வெற்றியீட்டிய அணிகள் மற்றும் சிறந்த வீரர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை தமிழரசுக் கட்சியின் வட்டுக்கோட்டை தொகுதித் தலைவரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் கலந்துகொண்டார். (ய-125)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:**. புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். நண்பர்களால் காரியங்களில் அனுகூலம் உண்டாகும்.

**இடபம்:** கையில் தேவையான பணம் இருந்தாலும் தந்தைவழியில் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். உறவினர்களால் குடும்பத்தில் சில சங்கடங்க்ள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்** : சிலர் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். என்றாலும் உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும்.

**கடகம்:** சின்னச் சின்னக் குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். புதிய முயற்சிகளில் ஈடுபடலாம். வாழ்க்கைத்துணை வழியில் செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்:** புதிய முயற்சிகளைமேற்கொள்ள உகந்த நாள். தொடங்கும் காரியங்கள் சாதகமாக முடியும். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்புக் குறையும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** பணிச்சுமை அதிகரிக்கும். எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பல முறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும்.

**துலாம்:** மனதில் உற்சாகம் அதிகரிக்கும். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும்.

**விருச்சிகம்** : அனுகூலமான நாள். உங்கள் செயல்கள் பாராட்டப்படும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

**தனுசு:** சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள். சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மகரம்:** சொல்லிலும் செயலிலும் பொறுமை தேவைப்படும் நாள். நிதானமாகச் செயற்படுங்கள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் கவனம் அவசியம்.


**கும்பம்:** மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்படும். அன்றாடப் பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. கால வைரவரை வழிபடுவதன் மூலம் மனதில் தெளிவு பிறக்கும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**மீனம்:** வீட்டில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். சிலருக்குப் பிள்ளைகள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

### ஜனாதிபதித் தேர்தலில்

# ரணில் போட்டியிட்டால் 'பம்முவாராம்' சஜித்!

## ஹரின் சீண்டல்



**கொழும்பு, ஜூலை 25**

**2024 ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போட்டியிட்டால், சஜித் பிரேமதாஸ வேட்பாளராகக் களமிறங்க மாட்டார். இதைப் பந்தயம் வைத்துத் தெரிவிக்கின்றேன் என்று அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டமொன்று அண்மையில் வத்தளையில் இடம்பெற்றது. அங்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் ஹரின் - இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

எங்களைக் கட்சியில் இருந்து நீக்கியதாக எனது முன்னாள் தலைவர் சஜித் பிரேமதாஸ கடிதம் அனுப்பி இருந்தார். எம்மை விலக்கியதாக தெரிவித்த பின்னர் நாங்கள் எங்கு செல்லப்போகிறோம்? ஆனால் அது தொடர்பில் நாங்கள் அலட்டிக்கொள்ளப்போவதில்லை. அத்துடன் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடுவார் என்பதே எமது நிலைப்பாடு. அதனை அவர் பகிரங்கமாக தெரிவித்த பின்னர் புத்தியுள்ள மனிதர்கள் எடுக்கும் தீர்மானத்தை கண்டுகொள்ளலாம். ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டால் சஜித் பிரேமதாஸ அந்தத் தேர்தலில் போட்டியிடமாட்டார் என்பதை நானும் மனுஷநாணயக்காரவும் பந்தயம் வைத்துத் தெரிவிக்கிறோம்.

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாமல் செய்ய வேண்டும். அதற்காக டலஸ் அழகப்பெருமவை ஜனாதிபதி வேட்பாளராக நியமிப்பதாகத் தெரிவித்து, தேர்தலில் இருந்து திருட்டுத்தனமாக ஒதுங்கிக் கொள்வார். அடுத்த ஜனாதிபதியாக வருவதற்கு ரணில் விக்கிரமசிங்கவைத் தவிர வேறு எவருக்கும் தகுதியில்லை. ஏனெனில் நாடு வீழ்ச்சியடைந்து வங்குரோத்து அடைந்திருந்த நிலையில், நாட்டைப் பொறுப்பேற்று, கட்டியெழுப்ப யாரும் முன்வராத நிலையில் ரணில் விக்கிரமசிங்க முன்வந்தார். அன்று ரணில் விக்கிரமசிங்க முன்வராவிட்டால் எமது நிலை என்னவாகி இருக்கும் என்பதை நினைத்துப்பார்க்க வேண்டும்.

அத்துடன் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து யாரையும் பிரித்து எடுக்க இன்னும் நான் முயற்சிக்கவில்லை. அந்தப் பணியில் இன்னும் இறங்கவில்லை. அதில் இருக்கும் அனைவரையும் என்னால் பிரித்தெடுக்க முடியும். நாடு வங்குரோத்து நிலையில் மூழ்கிக்கொண்டிருக்கையிலேயே நானும் மனுஷ நாணயக்காரவும் இந்தக் கப்பலில் ஏறினோம். எமது அரசியல் எதிர்காலம் தொடர்பில் சிந்திக்காமல், நாடு தொடர்பாக மாத்திரமே சிந்தித்து நாங்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்தோம் - என்றார். (ம)

## சொற்பொழிவுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 25

சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயத்தில் சுக்கிர வார விசேட சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் ஜூலை 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் நாகதம்பிரான் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வைத் தொடர்ந்து இளம்சைவப்புலவர் க.கைலநாதன் 'அறம் செய்ய விரும்பு' என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

★ ★ ★

சிவஸ்ரீ பால.திருகுணானந்தக் குருக்கள் நடத்தும் வாராந்த பெரியபுராணச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் 16 (கலிய நாயனார்) எதிர்வரும் ஜூலை 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் சாவற்கட்டு ஆனைக்கோட்டை அந்திக்குழி அருள்மிகு ஸ்ரீஞானவைரவர் காளி அம்பாள் தேவஸ்தான பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குரு பூஜையைத் தொடர்ந்து சொற்பொழிவை இளம்சைவப்புலவர் ச.நவநீதன் 'அகல்களில் திரியிட்டு அதில் எண்ணெய்க்குப் பதிலாக தன் குருதியை ஊற்ற கழுத்தை அரிய முற்பட்ட நாயனார்' என்னும் விடயப்பொருளில் ஆற்றவுள்ளார்.

★ ★ ★

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்த சுக்கிரவார சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் ஜூலை 28 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு ஆலய சண்முக விலாச மண்டபத்தில்இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பரிபாலன சபைத் தலைவர் த.சோதிலிங்கத்தின் தலைமையுரையைத் தொடர்ந்து சிறப்புச்சொற்பொழிவை இளம்சைவப்புலவர் த.மனோஜ்குமார் 'சிவத்தொண்டர் நெறி பரப்பிய மூலவர்' என்னும் விடயப்பொருளில் ஆற்றவுள்ளார். (ம-ரி2)

## நூல் வெளியீடு

மிருசுவில் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலய ஆசிரியை திருமதி நந்தினி ஜென்சன் றொனால்ட் எழுதிய 'கற்பனைச் சிறகுகள்' என்னும் கட்டுரைக் கவி நூல் வெளியீட்டு நிகழ்வு, நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் இ.நாகேந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.கிருபாகரன் மற்றும் சிறப்பு விருந்தினர்களாக வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சோதி.திருக்குமரன், மனிதம் 88இனைச் சேர்ந்த கேவடிவழகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மருதங்கேணியில் 86 கிலோ கஞ்சா

யாழ்ப்பாணம், ஜூலை 25

மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வெற்றிலைக்கேணி கடற்கரைப் பகுதியில் இருந்து பெருமளவான கேரளக் கஞ்சா நேற்றுத் திங்கட்கிழமை காலை மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பகுதியில் கஞ்சாப் பொதிகள் கைமாற்றப்படுகின்றன என்று கிடைத்த இரகசியத் தகவல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போதே மேற்படி 86 கிலோ கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-27)

## முதல் காலாண்டில் மின்சாரசபைக்கு ரூ.29 பில். இழப்பு

கொழும்பு, ஜூலை 25

இந்த வருடத்தின் முதல் காலாண்டில் இலங்கை மின்சாரசபைக்கு 29 பில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று மின்சாரசபையின் அரையாண்டு காலப்பகுதிக்கான நிதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிலக்கரி, எரிபொருள் என்பவற்றின் விலை 55 வீதத்தால் அதிகரித்துள்ளது. அத்துடன் வங்கிகளின் வட்டிவீத அதிகரிப்பும் இந்த இழப்புக்கு ஒரு காரணம். அத்துடன் உற்பத்திச் செலவுகளும் மின்சாரசபையின் இழப்புக்கு முக்கியமான காரணமாக இருக்கின்றது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)


## நினைவுகூருவதற்கான உரிமைகள் அவசியம்!

### பொலிஸ் அடக்குமுறைக்கு சுவிஸ் தூதுவர் அதிருப்தி

கொழும்பு, ஜூலை 25

40 வருடங்களுக்கு முன்னர் கறுப்பு ஜூலையில் இழக்கப்பட்ட அனைத்து உயிர்களையும் நாங்கள் நினைவு கூருகின்றோம். கடந்த காலங்களைக் கையாள்வதற்கும் ஐக்கிய எதிர்காலத்தை உருவாக்குவதற்கும் அமைதியான முறையில் நினைவுகூருவதற்கான உரிமை மிகவும் முக்கியமானது. அந்த உரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்று இலங்கைக்கான சுவிட்சர்லாந்து தூதுவர் டொமனிக் பேர்க்லெர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கறுப்பு ஜூலைக் கலவரத்தில் கொல்லப்பட்டோரின் 40 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் முன்னெடுக்கப்பட்டபோது, அந்த நிகழ்வில் பொலிஸாரும் படையினரும் பலப்பிரயோகம் செய்தனர். இதற்கு வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். (ம-6)


தொடர்ந்து 15வது தடவையாகவும் நாட்டின்
முதற்தர வங்கி என்ற விருதினை வென்றுள்ளது இலங்கை வங்கி!

எமது ஈடிணையற்ற நிதிசார் பலம், ஸ்த்திரத்தன்மை மற்றும் சிறந்த சேவைகள் என்பவற்றைப் பாராட்டி "Brand Finance" 2023 ஆம் ஆண்டின் முதற்தர வங்கி நாமமாக இலங்கை வங்கிக்கு மீண்டும் மகுடம் சூட்டியுள்ளது. இவ் வரலாற்றுச் சிறப்புமிகு பயணத்தில் எம்முடன் துணை நிற்கும் உங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இலங்கை வங்கி - தேசத்தின் வங்கியாளர்

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்


## மாணவர்களுக்கு திறன் மேம்பாட்டு நிகழ்வு




யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல்நகரில் உள்ள விவசாய பீடத்தில் மாணவர்களுக்கான திறன் மேம்பாட்டு நிகழ்வு கடந்த 22 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

அமெரிக்கத் தூதரகத்தால் அமெரிக்கன் கோணர் ஊடாக வழங்கப்பட்ட நிதியுதவின் கீழ் இடம்பெற்ற இந்த நிகழ்வில் 51 மாணவர்கள்பங்குபற்றினார்கள். விவசாயத்துறை சார்ந்து இருக்கும் பிரச்சினைகள், விவசாயத்துறையில் தற்போதுள்ள தொழில்நுட்பங்கள் தொடர்பில் மாணவர்களுக்கு விளக்கம் வழங்கப்பட்டது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, விவசாய பீடாதிபதி பேராசிரியர் எஸ்.வசந்தரூபா, செயற்றிட்ட இணைப்பாளர் கலாநிதி ரெ.சுவந்தினி மற்றும் விரிவுரையாளர்கள், மாணவர்கள், விவசாயிகள், விவசாயத் துறைசார்ந்து வேலை செய்யும் பங்காளர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## செல்லப்பா பரமசாமி

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் மீசாலை கிழக்கை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா பாரமசாமி காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா நாகமுத்து தம்பதியரின் பாசமிகு இளைய மகனும், காலஞ்சென்ற பாலசுந்தரம் கௌரிப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், சந்தரேஸ்வரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற தனபாலன், தனலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், குலராசசிங்கம், காலஞ்சென்ற பரமேஸ்வரி, தனபாலசிங்கம், சிவனேஸ்வரி (கனடா), மங்களேஸ்வரி ஜெயபாலசிங்கம், ஸ்ரீபாலசிங்கம், காலஞ்சென்ற சுகந்தி சிவபாலசிங்கம், காலஞ்சென்ற பொன்னம்பலம் சந்திரா ஆகியோரின் மைத்துனரும், கஜன் காநிலா, கார்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கௌசல்யா, தசாந்தன், பார்த்தீபன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், திவிசாலினி அஞ்ஜய், அபினேஸ், அக்சய் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (25.07.2023) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

077 8506 073
076 7900 681
0033612807032

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 25625) A-1


# இந்தியப் பயணச் சூடு ஆறமுதலே
# ரணிலைச் சந்தித்த சீனத் தூதுக்குழு

கொழும்பு, ஜூலை 25
சீன கமியூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழு மற்றும் அரசியல் குழுக்களின் உறுப்பினரும், ஷோங்கிங் நகரசபைக் குழுவின் செயலருமான யுவான் ஜியாஜூன் உள்ளிட்ட சீனத் தூதுக்குழுவினர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்த மறுநாள், இந்தச் சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றுள்ளது. (அ-ஒஇ)

# மூடப்படுகிறது நோர்வே தூதரகம்!

கொழும்பு, ஜூலை 25
இலங்கைக்கான நோர்வே தூதரகம் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் இலங்கையில் செயற்பாடுகளை முடித்துக் கொள்வதாக அறிவித்துள்ளது.
ஓகஸ்ட் 1 முதல் இலங்கை மற்றும் மாலைதீவுடனான நோர்வேயின் இருதரப்பு உறவுகளுக்கு புதுடில்லியில் உள்ள நோர்வே தூதரகம் பொறுப்பேற்கும் என்று தூதரகம் தனது முகநூல் பக்கத்தில் தெரிவித்துள்ளது. (அ-ஓ,6,22)


# முதலாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 10 . 11 . 1955



மறைவு 05 . 08 . 2022

## அமரர் திருமதி துரைராசா மகேந்திராணி


ஆண்டு ஒன்று ஆனதம்மா
அன்னை உந்தன் புன்னகையிலே
ஆறாத நினைவுகள் வளருதம்மா
அவனியில் ஊறிடும் நீரபோல

'பாமாலயம்'
மனோகரா, அல்வாய்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

மலர்வு 20 . 01 . 1937



உதிர்வு 23 . 07 . 2023

## திருமதி இராசமணி கிருஸ்ணபிள்ளை

இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசமணி கிருஸ்ணபிள்ளை அவர்கள் கடந்த (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதர் - பூரணம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சரவணமுத்து கிருஸ்ணபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், தோப்பு, அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருமதி சோதிப்பிள்ளை சோமசுந்தரம் அவர்களின் அன்புச் சகோதரியும், கிருபானந்தா (சுவிஸ்), சந்திரவதனா (ஜேர்மனி), கிருஸ்ணரஞ்சினி (ஜேர்மனி), கிருஸ்ணவேணி (ஆசிரியர் - இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம்), கிரிதரன் (ஜேர்மனி), கிருஸ்ணகுமாரி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விஜயமாலினி, பூவேந்திரநாதன், திருநாவுக்கரசு, வள்ளுவதாசன் (காசாளர் - யாழ். பல்கலைக்கழகம்), வினோபா, செந்தில்குமரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிரீசன், பிரியங்கன், ஹம்சானந்தி, ஆனந்தபைரவி, சகானந்தி, திசாந், கபிலன், வாகீசன், சுபத்திரன், அச்சயன், விசாகன், கீர்த்திகன், ஆதிகன், சுரபி, மேகவி ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2023) புதன்கிழமை காலை 9:30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இணுவில் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
திருமதி கிருஸ்ண[illegible]
(மகன்)
074 35 25 201

கருணாகரப்பிள்ளையார்
கோவில் வீதி, இணுவில் கிழக்கு.

(CS 25628) A-1

# மரண அறிவித்தல்

மலர்வு 16 . 02 . 1948



உதிர்வு 23 . 07 . 2023

## திருமதி திருநாவுக்கரசு கமலாம்பிகை

நாரந்தனையை பிறப்பிடமாகவும் சங்கத்தானை சாவகச்சேரியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி திருநாவுக்கரசு கமலாம்பிகை அவர்கள் கடந்த (23.07.2023) ஞாயிற்றுக்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி நாகம்மா தம்பதியரின் அன்பு புதல்வியும், காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம் மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற திருநாவுக்கரசு அவர்களின் (ஓய்வுபெற்ற அதிபர்) பாசமிகு மனைவியும், அமரர் நாகரத்தினம், அமரர் கோபாலப்பிள்ளை, அமரர் சீவரத்தினம், அமரர் செல்வரத்தினம் சிவஞானசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புவனேந்திரராசா, செல்வராசா, நவரத்தினராசா ஆகியோரின் அன்பு மைத்துனியும், தனுரேகா (கொலண்ட்), இந்துரேகா (விரிவுரையாளர், யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரி), கேமச்சந்திரன் (S&T Company, Colombo), பிறேமச்சந்திரன் (ஜேர்மனி), ஜேனுரேகா (ஜேர்மனி), பவளச்சந்திரன் (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சிவகுமார் (கொலண்ட்), மிதிலா, சுரேஸ் (ஜேர்மனி), ஜீவிதா (பெல்ஜியம்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கம்சிகா, ஹர்சிகா, ஹிரிசன், நவிஸ்ணு, சாருக், சித்திக், திரிஸ், கபிஸ்னா ஆகியோரின் அன்பு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

2[illegible] ஒழுங்கை, சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.
077 2395 856

(CR 40303) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ்த்...

'ஜனாதிபதி சந்திக்க விரும்புகின்றார். நாங்கள் நிச்சயம் கலந்துகொள்வோம்' என்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

'இன நல்லிணக்கம் தொடர்பாகப் பேசுவதற்கு அழைப்பு விடுத்துள்ளதாகவே ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இது வெறுமனே வாய் பேச்சில் மாத்திரம் இருக்கமுடியாது. இந்தியாவிலிருந்து வந்தவுடன் இதனைப் பற்றிச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. அங்கு வலியுறுத்தப்பட்டதால் அவர் இதனைப் பற்றிப் பேசுகின்றார். கூட்டத்தில் பங்கேற்றால்தான் என்ன நடக்கின்றது என்பது தெரியும்' என புளொட் அமைப்பின் தலைவரும் ஜனநாயகதமிழ்த்தேசியக்கூட்டணியின் இணைத் தலைவர்களில் ஒருவருமான த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன், இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முதல் இரு இனத்தையும் சமமாக நடத்த வேண்டும். ஏற்கனவே ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கூட்டத்தின் தொடர்ச்சியாகவே இதனைப் பார்க்கின்றேன். வெறுமனே இன நல்லிணக்கம் என்ற போர்வையில் கூட்டத்தை நடத்தினால் நான் அதில் கலந்து கொள்வேனோ தெரியவில்லை. பெரும்பாலும் கலந்து கொள்ளாமல் இருப்பேன். ஆனாலும் இறுதி முடிவு எடுக்கவில்லை - என்றார்.

'ஜனாதிபதியின் கூட்டத்தில் பங்கேற்க மாட்டோம்' என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் தெரிவித்தார்.

இதேவேளை - இந்தக் கூட்டத்தில் பங்கேற்கப்போவதில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

தேசிய நல்லிணக்க வேலைத்திட்டம் தொடர்பில் நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்களை அறிவூட்டும் சர்வகட்சி மாநாடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நாளை பிற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெறவுள்ளது. இதற்காக நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களின் தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதில் பங்கேற்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ.5,44,125)

## கட்டைக்காட்டில்...

வடமராட்சி கிழக்கு, கட்டைக்காடு பிரதேசத்தில் கடற்படை முகாம் அமைந்துள்ள காணியை நிரந்தரமாக சுவீகரிப்பதற்கு நேற்று திங்கட்கிழமை காலை நில அளவைத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி மக்கள் எதிர்ப்பால் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

கட்டைக்காடு, ஜே /433 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட முள்ளியானிலுள்ள ஜேமிஸ் யோகராஜா என்பவருக்குச் சொந்தமான காணியில் கடற்படைமுகாம் அமைந்துள்ளது. அவருக்குச் சொந்தமான 3 பரப்புக் காணியில் ஒன்றரைப் பரப்பில் முகாம் அமைக்கப்பட்டுள்ளது.

அந்தக் காணியை நிரந்தரமாகச் சுவீகரிப்புச் செய்வதற்காக நில அளவைத் திணைக்களத்தினர் அளவீட்டுப் பணிகளை மேற்கொள்வதற்கு நேற்றுக் காலை வந்தபோது காணி உரிமையாளர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் எதிர்ப்பைத் தெரிவித்திருந்தனர். இதையடுத்து அளவீட்டுப் பணியை நில அளவைத் திணைக்களத்தினர் தற்காலிகமாக இடைநிறுத்திச் சென்றுள்ளனர். எதிர்ப்பு நடவடிக்கையில் பிரதேச மக்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன், வட மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.

குறித்த காணியில் காணி உரிமையாளர் வசித்து வந்த நிலையில் சுனாமி அனர்த்தத்தின்போது வீடு அழிவடைந்துள்ளது. கடற்கரையை அண்மித்த பகுதியில் கட்டுமானங்களை மேற்கொள்ள விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் காரணமாக வீட்டை மீளப் புனரமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை. இதையடுத்து காணி உரிமையாளர் அதே பிரதேசத்தில் வேறு ஓர் இடத்தில் வசித்து வருகிறார். இடைப்பட்ட காலத்தில் குறித்த இடத்தில் கடற்படையினர் முகாம் ஒன்றை அமைத்திருந்த நிலையில் நிரந்தரமாகவே காணியைச் சுவீகரிக்கும் வகையில் இந்த அளவீட்டுப் பணி மேற்கொள்ளப்பட இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - வடமராட்சி கிழக்கில் தொடர்ச்சியாக 5 நாள்கள் வேறுவேறு இடங்களில் காணி சுவீகரிப்பு முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ஓ.22,26,27,66,100)

## பணிப்பெண்...

தர்மிகா (வயது-17) சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பாக அதிர்ச்சியையும், ஆழ்ந்த கவலையையும் வெளியிட்ட வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸ், இதுதொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் வடக்கு ஆளுநர் ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள ஊடக அறிக்கையில், மூத்த பொலிஸ்மா அதிபருடனும், யாழ். மாவட்டப் பிரதிப் பொலிஸ்மா அதிபருடனும் இதுதொடர்பாக அவசரமாகத் தொடர்புகொண்டு கலந்துரையாடிய ஆளுநர், இதில் குற்றம் ஏதும் இழைக்கப்பட்டிருப்பதாக அடையாளம் காணப்பட்டால், சம்பந்தப்பட்டவர்கள் மீது பாரபட்சமின்றி உரிய நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான உண்மை என்ன என்பதை தீர விசாரித்து அறியுமாறு கூறியுள்ள ஆளுநர், ஆளுநர் செயலகத்தின் தொடர்புபட்ட அலுவலர்களையும் இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணைகளைமேற்கொண்டுஅறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்துள்ளார்.

பாடசாலை செல்லும் வயதுடைய சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் செயற்பாடுகள் இன்னும் நடைபெற்றுக்கொண்டிருப்பது தமக்கு பேரதிர்ச்சியை ஏற்படுத்துவதாகக் கூறிய ஆளுநர், இது தொடர்பான தமது ஆழ்ந்த கண்டனத்தை வெளியிட்டதுடன், இந்தச் சம்பவம் ஒரு குற்றச்செயலாக அமைந்திருப்பின் அது தொடர்பில் குற்றமிழைத்தவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதை ஆளுநர் செயலகம் தொடர்ந்து கண்காணிக்கும் எனவும், இவ்வாறான சம்பவங்கள் இனியும் தொடராதிருக்கத் தேவையான காத்திரமான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் எடுப்பதையும் செயலகம் உன்னிப்பாக அவதானிக்கும் என்றும் தெரிவித்தார் - என்றுள்ளது. (அ-ஓ.26)

## மனிதப்புதைகுழி...

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகளின் வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், யாழ்ப்பாணம், அம்பாறை தலைவர்கள் இந்த அழைப்பை நேற்று நடத்திய ஊடக சந்திப்புகள் ஊடாக விடுத்துள்ளனர்.

கவனவீர்ப்புப் பேரணியானது வெள்ளியன்று காலை 9 மணியளவில் மக்கள் இறுதிப்போரில் உறவுகளை இராணுவத்திடம் கையளித்த பகுதிக்கு அண்மையில் ஆரம்பிக்கும். முல்லைத்தீவு நீதிமன்றுக்கு முன்பாகச் சென்று மாங்குளம் - முல்லைத்தீவு வீதியூடாக மாவட்டச் செயலகத்தை வந்தடைந்து அங்கு மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டமும் இடம்பெறும்.

போராட்டத்தில் அனைத்துத் தரப்பினரும், அரசியல் கட்சிகளும் எவ்வித பேதமுமின்றி ஆதரவளிக்கவேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் வடக்கு - கிழக்கில் வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களை மூடியும், பேருந்து உரிமையாளர்கள் போக்குவரத்துக்களை நிறுத்தியும் பூரண ஹர்த்தாலுக்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். (அ-ஓ.20,22,26,246)

## 9 மாதக்...

ஒருவர் அம்புலன்ஸில் காக்கவைக்கப்பட்டுள்ளார். அம்புலன்ஸ் இல்லாமையால் மருத்துவமனையில் அவசர நோயாளர்கள் பலர் காத்திருக்கவேண்டிய அவல நிலையும் ஏற்பட்டுள்ளது.

நெடுந்தீவைச் சேர்ந்த ம.மௌலீஸ் என்ற 9 மாதக் குழந்தை நேற்று திங்கட்கிழமை காலை பால் புரைக்கேறிய நிலையில் பெற்றோர் நெடுந்தீவு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றுள்ளனர். குழந்தை உயிரிழந்துள்ளதாக அங்கிருந்த மருத்துவர் தெரிவித்துள்ளார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னரே சடலத்தை ஒப்படைக்கலாம் என்றும் சடலத்தை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்குமாறும் மருத்துவர் பணித்துள்ளார்.

தாயிடம் சடலத்தை ஒப்படைத்து, யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்குமாறு கூறி அனுப்பி வைத்துள்ளார். இதனால் தாய் குழந்தையின் சடலத்துடன், நெடுந்தீவிலிருந்து படகு மூலம் குறிகாட்டுவான் வந்து, அங்கிருந்து அம்புலன்ஸுக்கு அறிவித்து, அதில் குழந்தையின் சடலத்துடன் யாழ். போதனா மருத்துவமனைக்கு வந்துள்ளார்.

அப்போது, சடலத்தை நெடுந்தீவு மருத்துவமனையிலிருந்து கொண்டு வருவதற்குரிய ஆவணங்கள் இல்லாமையால், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வெளிநோயாளர் பிரிவில் ஏற்க முடியாது என்று தெரிவித்துள்ளனர். அத்துடன் சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனை மேற்கொள்வதற்குரிய நீதிமன்ற உத்தரவு இல்லாமையையும் சுட்டிக்காட்டியுள்ளனர். இதனால் சடலத்துடன் பல மணி நேரம் தாயார் அம்புலன்ஸில் இருக்கப் பணிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸார் ஊடாக நீதிமன்ற அனுமதி பெறப்பட்ட பின்னரே சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்திய பின்னர் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது.

தன் குழந்தையின் சடலத்துடன் தாயொருவர் பலமணிநேரம் மனிதநேயமில்லாது காக்கவைக்கப்பட்ட சம்பவத்துக்குப் பலரும் கண்டனம் வெளியிட்டுள்ளனர்.

இது குறித்து யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தியிடம் கருத்துக் கேட்டபோது, இந்தச் சம்பவம் குறித்து எவ்வித முறைப்பாடும் எனக்கு இதுவரை கிடைக்கவில்லை. அவ்வாறு கிடைக்கும்பட்சத்தில் உரிய விசாரணைகளும், அதனடிப்படையிலான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் - என்றார்.

இதேவேளை - அம்புலன்ஸ் நீண்டநேரம் போதனா மருத்துவமனையில் தாமதப்படுத்தப்பட்டதால், புங்குடுதீவு மருத்துவமனையிலிருந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்படவேண்டிய நோயாளர்கள் பல மணி நேரம் அங்கு காத்திருந்துள்ளனர். (அ-ஓ.26)

## நினைவேந்தலைத்...

போதும் ஏற்றுக்கொள்ளமுடியாது. அதற்குப்பொலிஸார்துணைபோனமையும் கண்டனத்துக்குரியது - இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

கொழும்பு பொரளையில் நேற்றுமுன்தினம் இடம்பெறவிருந்த நினைவேந்தல் நிகழ்வை சிங்கள ராவய மற்றும் பொலிஸார், இராணுவத்தினர் இணைந்து குழப்பியிருந்தனர். இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த சந்திரிகா, 'கறுப்பு ஜூலை கலவரமொன்று மீண்டும் நாட்டில் இடம்பெறக்கூடாது என்பது தான் ஜனநாயகத்தை விரும்பும் அனைவரினதும் பிரார்த்தனையாகும். அந்தச் சம்பவம் எதனால் இடம்பெற்றது என்பது தொடர்பில் விளக்கமளிக்கவேண்டிய அவசியமில்லை. அதில் உயிரிழந்தவர்களை கொழும்பில் நினைவேந்த முற்பட்டமையைத் தடுத்து நிறுத்தியமை கண்டிக்கத்தக்கது. அங்கு பொலிஸார் நடந்துகொண்ட விதமும் கண்டனத்துக் குரியது. மக்கள் தம் நினைவேந்தல் உரிமையின் பிரகாரம் உயிரிழந்தவர்களை நினைவேந்தியபோதும் அதை இனவாதநோக்குடன் பார்த்த அந்த இனவாத அமைப்பையும் நான் வன்மையாகக் கண்டிக்கின்றேன். மீண்டும் ஒரு கலவரத்துக்கு தூபமிடும் இத்தகைய இனவாத அமைப்புகள் உடனடியாகத் தடை செய்யப்படவேண்டும்' என்றார் சந்திரிகா. (அ-ஓ.5,22)

## நினைவேந்துவதால்...

கொள்கின்றோம் - இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் கறுப்பு ஜூலை நினைவேந்தல் குழப்பியடிக்கப்பட்டமை தொடர்பிலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

'ஜூலையில் குருதிக்களரியை ஏற்படுத்தியது விடுதலைப் புலிகள்தான். வடக்கில் படையினர் மீது புலிகள் நடத்திய மிலேச்சத்தனமான தாக்குதல்தான் தெற்கில் மோதலாக வெடித்தது. அந்தச் சம்பவத்தை மறக்கவேண்டிய நிலையிலிருக்கவேண்டிய நாம் மீண்டும் அதை நினைவுபடுத்தும் வகையில், ஒரு குழப்பத்தை விரும்பும் வகையில் நினைவேந்தல் என்ற பெயரில் கலவரத்தை ஏற்படுத்த முனைவதை ஏற்க முடியாது. கொழும்பு நினைவேந்தலை வேண்டுமென்றே ஏற்பாடு செய்துள்ளனர். இவர்கள் புலம்பெயர் தமிழர்களின் நிதி உதவியுடன் இயங்குபவர்கள். உயிரிழந்த புலிகளையும் (முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்) நினைவேந்தும் இந்தக் குழுதான் நேற்றைய (நேற்றுமுன்தினம்) அந்த நிகழ்வையும் நடத்தியது. இதுதான் எமது மக்களின் ஆத்திரத்துக்கு காரணம். இப்படியான நினைவேந்தல் கொழும்பில் தேவையற்றது. வேண்டும் என்றால் அதை வடக்கிலும் கிழக்கிலும் தமிழர்கள் நடத்தட்டும். அமைதியான தலைநகர் கொழும்பை குருதி ஆறு ஓடும் பூமியாக மாற்ற முயலும் தரப்பினர் நாட்டின் இன ஒற்றுமை கருதிச் செயற்பட வேண்டும்' - என்றனர். (அ-ஓ.5,22)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வனவளத்திணைக்களத்திடமிருந்து

# காணியை விடுவிக்கக்கோரி உணவுத் தவிர்ப்புப் போராட்டம்

முல்லைத்தீவு, ஜூலை 25

வனவளத்திணைக்களம் கையகப்படுத்திவைத்துள்ள தமது காணிகளை விடுவிக்க வலியுறுத்தியும், காணிகளுக்குரிய 20 குடும்பங்களை விரைவில் குடியேற்றுமாறும் கோரி முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு, கைவேலிப் பகுதியில் நால்வர் நேற்று உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு - பரந்தன் பிரதான வீதியோரத்தில், தகரக் கொட்டகை அமைக்கப்பட்டு போராட்டம் இடம்பெறுகின்றது.

(அ-ஓ,246)



## மீண்டும்...

வைத்து வழிபாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டுள்ளமை தொடர்பில் கல்கமுவ சந்தபோதி தேரருக்கு எதிராக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன் ஆகியோரால் முறைப்பாடொன்று நேற்றுப் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

கடந்த 14ஆம் திகதி, குருந்தூர்மலையில் தமிழ் மக்கள் பொங்கல் வழிபாடுகளை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தநிலையில், முதல் நாளான 13ஆம் திகதி முல்லைத்தீவு பொலிஸார் வழிபாட்டுக்கு, முல்லைத்தீவு நீதிமன்றில் தடையுத்தரவைக் கோரியிருந்தனர். இதன்போது முல்லைத்தீவு நீதிமன்றால் சில கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

அக் கட்டளைகளில் குறிப்பாக 'குருந்தூர்மலை தொல்லியல் பிரதேசத்தில் எவ்விதமான சிலைகள் வைப்பதோ, சின்னங்கள் வைப்பதோ, கட்டுமானங்கள் மேற்கொள்வதோ தொல்லியல் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படவேண்டிய குற்றமாகும். குருந்தூர்மலை தொல்லியல் பிரதேசத்தில் எவரும் ஏதேனும் சிலைகள் வைத்தாலோ, சிவலிங்கம், திரிசூலம் போன்றவற்றை நிறுவினாலோ, ஏதேனும் கட்டுமானங்களையோ, நிர்மாணங்களையோ செய்தால் அது நீதிமன்றக் கட்டளையை மீறும் நீதிமன்ற அவமதிப்புக்குற்றமாகும். எவரும் இவ்வாறான செயல்களைச் செய்தால் அவர்களுக்கு எதிராகப் பொலிஸாரால் நீதிமன்ற அவமதிப்பு வழக்குத்தாக்கல் செய்யப்படமுடியும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

நீதிமன்றால் வழங்கப்பட்ட கட்டளைகளை மீறும் விதமாக கல்கமுவ சந்தபோதி தேரர் தலைமையிலான குழுவினர் புத்தர்சிலையை வைத்து வழிபாடுகளை மேற்கொண்டுள்ளதாகவே முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குருந்தூர்மலை அடிவாரத்தில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பாதுகாப்புக் கடமையில் உள்ள நிலையில் இவ்வாறு புத்தர் சிலை எடுத்துச் செல்லப்பட்டு, குருந்தூர்மலையில் வைக்கப்பட்டு வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

(அ-ஓ,246)


### காணி விற்பனைக்கு

தும்பளை (பருத்தித்துறை) யில் கட்டி முடிக்கப்படாத வீட்டுடன் கூடிய இரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (CS/51360) AH-1

076 037 1963

### காணி, வீடு விற்பனைக்கு

கல்வியங்காடு விளையாட்டரங்கு வீதியில் 2 பரப்பு 17 குளி விஸ்தீரணம் உள்ள வீடும், காணியும் விற்பனைக்குண்டு.

076 1598 003
076 940 1045

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ். நகரிலிருந்து 7km எல்லைக்குள் சிறிய உணவுத் தொழிற்சாலைக்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு இலக்கம்:-

077 6280 685

### காணி விற்பனைக்கு உண்டு


யாழ்ப்பாணம் வசாவிளான் குட்டியபுலம் பாடசாலை அருகாமையில் 36 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**

* குடியிருப்புக்கள் சூழவுள்ளபகுதி
* செம்மண், நன்னீரூற்று
* 2 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
* பலாலி வீதியிலிருந்து 1 km தூரம்
* ஒரு பரப்பின் விலை ஆறு லட்சத்து ஐம்பதாயிரம் (650,000/=)
* நிலாவரை கிணற்றிலிருந்து 2 km தூரம்

தொடர்பு: 076 057 0354, 076 826 0354


## மரண அறிவித்தல்



தோற்றம் 12 . 06 . 1981 மறைவு 16 . 07 . 2023

### திரு. கதிரமலை கஜேந்திரன்

குரும்பசிட்டி, மடத்தடியைப் பிறப்பிடமாகவும், லண்டன் நகரை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கதிரமலை கஜேந்திரன் கடந்த (16.07.2023) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் காலமாகிவிட்டார்.

அன்னார் கதிரமலை - இராஜேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும், தாஜிதாவின் அன்புக் கணவரும், சுதர்சன், சுபாசினி, வேந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், கார்த்திகா, கோபிநாத் ஆகியோரின் மைத்துனரும், பிருந்தா, காவ்யா ஆகியோரின் சித்தப்பாவும், மாதுரியின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான கணபதி, பார்வதி, சின்னத்துரை மற்றும் குண்டுமணி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.07.2023) புதன்கிழமை நண்பகல் 12.00 pm - 5.00 pm மணியளவில் லண்டனில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

லைடன் பாம் ஒழுங்கை,
இராசவீதி, கோப்பாய் மத்தி,
கோப்பாய்.

(CS/51397)AH-1

தகவல்:
இராஜகோபால் (பெரியப்பா)
குடும்பத்தினர்.

## நீங்கா நினைவலைகள்

12ஆம் ஆண்டு 13ஆம் ஆண்டு

பிறப்பு 05.02.1933 பிறப்பு 04.06.1935



இறப்பு 30.06.2011 இறப்பு 16.08.2010

மாதகல் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்

(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன முன்னாள் உத்தியோகத்தர்)

*திதி: அபரபக்க சதுர்த்தசி (16.07.2023)*

உங்கள் இருவரையும் தேடி ஊர் உலகம் தேடி
நாயாய் அலைகின்றோம் எப்போ கிடைப்பீர்கள்?
யாரைக் கேட்கிறது எங்கே ஆறுவோம்?

அம்மாவின் பிரிவுத்துயர் தாழாமல்
அவரோடு நீங்களும் சென்றது ஏன் தொடர்ந்து?
உங்கள் திருமண தினத்தன்று
அக்கினியில் நீங்கள் செய்துகொண்ட
சத்தியம் தான் காரணமோ?

வேதனைகள் வேர் வரை சென்றாலும்
விழுதுகளாய் எம்மைத் தாங்கினீர்கள்!
உங்கள் இருவரின் குரல் கேட்காமல்
பரிதவிக்கும் எங்கள் குமுறல்கள்
உங்கள் காதுகளில் கேட்கிறதா?

ஊர் விட்டு வந்து நம் சொந்த ஊருக்கு
திரும்ப முடியாமல் தவித்த தவிப்பும்
இப்போ ஊருக்கு போகு நிலை வந்தும்
போவதற்கு நீங்கள் இல்லையே அப்பா....

உயரங்கள் நாம் காண எம்
வாழ்க்கைப் பயணத்தில் துணையாய் இருந்த
ஈரிரண்டு கண்களையும் கண்கெட்ட
எமனுக்கோ பொறுக்கவில்லை

நாள்கள் வாரமாகி வாரங்கள் மாதமாகி
மாதங்கள் ஆண்டாகி போனாலும்
ஆறவில்லை எங்கள் துயர்

உங்கள் வார்த்தைகள் எம்மை வாழவைக்கும்
உங்கள் நினைவுகள் எம்மை வாழ்த்திடும்

### திருமதி பாக்கியம் பூபாலசிங்கம்

*திதி: பூர்பக்க அட்டமி (25.07.2023)*

அம்மா நீ சென்ற கணமும்
அம்மா நீ சொன்ன வார்த்தைகளும்
அம்மா நீ செய்த உன்னதங்களும்
அம்மா நீ தந்த நெறிகளும்
எம் நெஞ்சினில் என்றும் அழியாதம்மா
எழுகின்ற கேள்விகளுக்கெல்லாம்

நாளும் விடை தேடுகின்றோம் அம்மா!
எங்கள் வலிகளைத் தாங்க
யாருமே இல்லையம்மா
அப்பா அம்மா இல்லாத
அநாதைகளானோம் அம்மா
அந்த இறைவனே கண்ணீரைப் பரிசாகத் தந்து
மௌனம் காணுகின்றார் அம்மா

அன்பு அம்மாவே!
கொடிய நோய் வடிவில் காலன்
கொன்றுவிட்டானே உங்களை
அன்று மாலைவரை நீங்கள் புரிந்த அன்பு மழை
இன்னும் எம் கண்முன்னே வந்து செல்லுதம்மா.....

நாடு கடந்து வந்து நாம் உங்களைக் கண்டு
நாளும் பொழுதும் மகிழ்ந்து இருந்த கணங்களும்
மருமகளையும், பேரப்பிள்ளைகளையும்
நீ கொஞ்சிக் குலாவிய தருணங்களும்
என்றும் உங்களை நினைவூட்டுகின்றது அம்மா......

நீங்கள் எனக்காக கட்டிய வீடு
இன்று பாலைவனமாய் கிடக்கின்றது
நீங்கள் இன்று இருந்திருந்தால்
நீங்களாவது அந்த வீட்டில் இருந்திருப்பீர்களே அம்மா.......
உயிரைத் தந்து உடலில் சுமந்து
உலகில் வாழ உருவம் தந்த
தெய்வம் நீயம்மா!

**உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!**

மாதகல் மேற்கு,
மாதகல்.

(CS.25069) (N.1)

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்
மகன் - 077 774 3185

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.